விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 21 வெள்ளிக்கிழமை (05.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 076

## யாழ்ப்பாணம் கார்கில்ஸ் திரையரங்கு ஊழியர்கள் எழுவருக்கு கொரோனா

### திரையரங்கு மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கார்கில்ஸ் திரையரங்கில் பணியாற்றும் ஊழியர்கள் ஏழு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத் தில் நடைபெற்ற பிசிஆர் 19

### இ.போ.ச சாரதி உட்பட

## வடக்கில் 13 பேருக்கு கொரோனா தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழில் உள்ள திரையரங்க ஊழியர்கள் ஏழு பேர் மற்றும் போக்குவரத்து சபை பேருந்து சாரதி ஒருவர் உள்ளடங்கலாக வடக்கில் மேலும் 13 பேருக்கு நேற்றைய தினம் தொற்று உறுதி செய்யப் 19

## சாவகச்சேரியில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)
சாவகச்சேரி சரசாலைப் பகுதியில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதல் சரசாலை வடக்கு பகுதியைச் 19

## மன்னாரில் நேற்று குழந்தை பிரசவித்த தாய்க்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
மன்னாரில் நேற்று குழந்தை பிரசவித்த தாயார் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ். 19

# இலங்கையில் தலையிட ஐ.நாவுக்கு உரிமை இல்லை

## அமைச்சர் சரத் வீரசேகர வீராப்பு



**(கொழும்பு)**

**இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிட ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

**மேலும் தமிழர் தரப்பும் புலி ஆதரவு நாடுகளும் இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளவே முயற்சிக்கின்றன என்றும் குற்றம் சுமத்தினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சிகள் இலங்கை குறித்த பொய்யான காரணிகளைச் சர்வதேசத்துக்குக் கொண்டு சென்று இலங்கையை 19

## சுவர் இடிந்து வீழ்ந்ததில் இளம் குடும்பஸ்தர் பலி

### மன்னாரில் சம்பவம்

(மன்னார்)
வீட்டின் சுவரை இடித்து வேலை செய்ய முற்பட்டபோது சுவர் முழுவதுமாக இடிந்து வீழ்ந்ததில் இடிபாடுகளில் சிக்கிய சகோதரர்களில் ஒருவரான இளம் குடும்பஸ்தர் பலியான நிலையில் மற் 19

## கிளிநொச்சியில் கிணற்றில் வீசப்பட்டு உயிரிழந்த மூன்று குழந்தைகள்



கிருபாகரன் டெனேஸ் · கிருபாகரன் அக்சயா · கிருபாகரன் கிருத்திகா

(கிளிநொச்சி)
கிளிநொச்சி வட்டக்கச்சியில் தனது மூன்று பிள்ளைகளுடன் தாய் ஒருவர் கிணற்றில் வீழ்ந்து தற்கொலைக்கு முயன்ற நிலையில் தாய் மீட்கப்பட்டதோடு மூன்று குழந்தைகளும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். 19

## யாழ்.பல்கலை மருத்துவ பீட மாணவனுக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கல்வி பயிலும் மாண 19

## சடலங்களை புதைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இரணைதீவில் மக்கள் நேற்றும் போராட்டம்

(கிளிநொச்சி)
கொரோனா தொற்றால் உயிர் இழந்தவர்களின் உடல்களை இரணைதீவு பகுதியில் புதைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் புதனகிழமை இரணை 19



## இராஜாங்க அமைச்சர் அருந்திக்க இன்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)
தென்னை, 19

## மல்லாகத்தில் ஆசிரியர் மீது வாள்வெட்டு தாக்குதல்

### மோ.சைக்கிளில் வந்த 3 பேர் கொண்ட குழு அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மல்லாகம் சந்தியை அண்மித்த பகுதியில் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்த ஆசிரியர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த 19

## யாழ்.மாவட்ட செயலக நுழைவாயிலை மறித்து

### முன்னணியினர் போராட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்ட செயலக நுழைவாயிலை மறித்து, தமிழ்த் தேசிய மக்கள்




19

## கொரோனா மேலும் 5 பேர் பலி

(கொழும்பு)
கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 5 பேர் உயிரிழந் 19

## இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த
# உலக நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும்
### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென, உலக நாடுகளுக்கு அழுத்தத்தைக் கொடுக்க அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்து.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் ஆறாவது நாளாக இன்றும் தொடர்கின்றது.

குறித்த போராட்டம் தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் பா.உஜாந்தன் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

நீதி வேண்டிய இந்த போராட்டம் நல்லூர் - நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

குறித்த போராட்டத்திற்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர், மதத் தலைவர்கள் என பலரும் தமது ஆதரவினை தெரிவித்து வருகின்றனர்.

போராட்டத்தின் கோரிக்கைகளாவன...

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதினூடாக இலங்கை அரசாங்கத்தினால் புரியப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் மனித நேயத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் இனத்திற்கு எதிரான இனவழிப்பு என்பவற்றிக்கு சர்வதேச நீதி வேண்டும். தமிழ் இனத்தின் மீதான இனவழிப்பு தொடராது இருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து குறித்த சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-03,33)

# தமிழர்களின் அகிம்சை பேரணி பூச்சாண்டி காட்டுகின்றனர் பொலிஸார்
### பருத்தித்துறை நீதிமன்றில் சட்டத்தரணிகள்

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான போராட்டத்தின் பின்னர் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட பி அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றினால் எந்த நடவடிக்கையையும் எடுக்கமுடியாது, அதனை வைத்து பொலிஸார் பூச்சாண்டி காட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர் என்று தமிழ்த் தேசியத் தரப்பு சட்டத்தரணிகளால் பருத்தித்துறை நீதிமன்றில் காரசாரமான வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான போராட்டத்தில் பங்குகொண்டமை தொடர்பில் பொலிஸாரால் பி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பிரமுகர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளும் வாக்குமூலம்பதியும்நடவடிக்கையும்மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இந்நிலையில் குறித்த அறிக்கைக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட நகர்த்தல் பத்திரம் மீதான வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றது.

இதன் போது சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் சட்டத்தரணிகள் வீ.திருக்குமரன், வீ.மணிவண்ணன், கே.சயந்தன் உட்பட்ட 20 இற்கும் அதிகமான சட்டத்தரணிகள் பிரசன்னமாகியிருந்தனர்.

இதன் போது,

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி அறிக்கையில் என்ன குற்றம் இழைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடப்படவில்லை. இதன்படி சட்டக்கோவையின் பிரகாரம் குற்றமிழைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கமுடியாது. ஆனால் இந்த வழக்கினை வைத்து பொலிஸார் பூச்சாண்டி காட்டுகின்ற நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

சட்டக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கமுடியாது என்கிற நிலையில் பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு நீதிமன்றமும் உடந்தையாகச் செயற்பட முடியாது என்றும் சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் வலியுறுத்தித் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-03)

# காரால் மோதி கூரிய ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவர் படுகொலை
### குருணாகலில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பில் பெண்ணொருவர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டு பரபர்ப்பு அடைந் துள்ள நிலையில், மற்றுமொருவர் நேற்று கொலை செய்யப்பட் டுள்ளார்.

குருணாகல், நாரம்மல பஹமுனே பகுதியில் ஆண் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் கொடூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பஹமுனே கூரிகொட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதான ஒருவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

காரொன்றில் வந்த சந்தேகநபர், மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நபரை மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார். பின்னர் கூரிய ஆயுதத்தினால் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தின் பின்னர் கொலையாளி நாரம்மல பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபர் தன்னுடைய மனைவியின் அந்தரங்க புகைப்படங்களை தனது கைப்பேசிக்கு அனுப்பி தன்னை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியதால் கொலை செய்ததாக வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03)

மணமக்கள் தேவை

84, ஆயிலியம், 17 பாவம், சுவிஸ் சிற்றிசன் மணமகன்.
94, R.C வேதம், பட்டதாரி மணமகன்
( துர்க்கா திருமண சேவை.)
(6030)
077 818 5978

# இலங்கையில் முதலாவது கொரோனா தொற்றுக்குள்ளானவரின்
### குருதி மாதிரி மீண்டும் பெறப்பட்டது

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட முதலாவது இலங்கையரிடம் இருந்து ஒரு வருடத்தின் பின்னர் மீண்டும் குருதி மாதிரி பெறப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் 11ஆம் திகதி மத்தேகொடயை சேர்ந்த சுற்றுலா வழிகாட்டி ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளான முதல் இலங்கையராக அடையாளம் காணப்பட்டார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர் பரிசோதனைகளின் போது அவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார்.

தொற்றுக்குள்ளான நபர் தற்போது குணமடைந்துள்ள போதிலும் அவரது உடலில் காணப்படும் நோய் எதிர்பு சக்தியை பரிசோதனை செய்வதற்காக அவரிடம் இருந்து இன்று மீண்டும் குருதி மாதிரி பெறப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வு பிரிவு ஒன்றினால் இந்த மாதிரி பெறப்பட்டுள்ளது. கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களுக்கு மீண்டும் கொரோனா தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றதா என கண்டறிவதே இந்த ஆய்வின் நோக்கம் என குறித்த ஆய்வு பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார். (ம-03)

### ரூ 10 இலட்சம் பெறுமதியான
# சட்டவிரோத பட்டி வலைகள் மன்னாரில் மீட்பு

(மன்னார்)

மன்னாரில் சட்டவிரோதமாக பாயப்பட்டிருந்த 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான பட்டிவலைத் தொகுதிகள் மன்னார் மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்தால் அகற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

மன்னார் வங்காள பிரதேச மீனவர்களின் கரவலைப்பாடுகளால் அத்துமீறி சட்டவிரோதமாக பாயப்பட்டிருந்த 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான பட்டிவலைத் தொகுதிகளே மன்னார் மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியுடன் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினர் மேற்கொண்ட விசேட களப் பணியின் மூலம் அகற்றப்பட்டுள்ளது. (ம-03)

# நெற்குவியல்களுக்கு விசமிகளால் தீ வைப்பு
### சிறுப்பிட்டியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

நெல் அறுவடை செய்து சூடு அடிப்பதற்காக வைக் கப்பட்ட குவியலுக்கு விசமிக ளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று சிறுப்பிட்டி பூரார் றோட் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதனால் 2 நெற்குவியல்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

யாழ். மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் குறித்த தீயினை கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (ம-03,134)

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து பாராளுமன்றத்தில் விவாதம்

(கொழும்பு)

கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஏப்ரல்-21 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான அறிக்கை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஏப்ரல்-21 தாக்குதல் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையே இவ்வாறு எதிர்வரும் 10ஆம் திகதி பாராளுமன்றில் விவாதத்திற்கு வரவுள்ளது.

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (ம-03)

# வடமாகாண காணிகளின் ஆவணங்களை அநுராதபுர அலுவலகத்திற்கு மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்




(குப்பிழான்)

வடமாகாண காணிகளின் ஆவணங்களை காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அநுராதபுர அலுவலகத்துக்கு மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதனை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தியும் யாழ்.மாவட்டச் செயலகத்தின் பிரதான நுழைவாயிலை இடைமறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று வியாழக்கிழமை காலை 7.30 மணி முதல் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன் மாவட்டச் செயலகத்திற்குள் அமைந்துள்ள காணித் திணைக்கள அலுவலகத்திற்குச் செல்லும் நுழைவாயிலின் முன்பாகவும் சமநேரத்தில் போராட்டம் முன்னெடுத்தனர். (5-18-33)

# கடத்தல் மரங்களுடன் வாகனம் பறிமுதல்



(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் கடத்தல் மரங்களுடன் சென்ற வாகனமொன்று இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றதுடன், சந்தேகநபர்கள் வாகனத்தை அவ்விடத்தில் விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

சங்குப்பிட்டி - பூநகரி இடையிலான இராணுவத்தின் வீதித் தடைப் பகுதியில் குறித்த வாகனம் நிறுத்தாமல் சென்ற நிலையில், இராணுவத்தின் நடவடிக்கையில் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது, கிட்டத்தட்ட நூறு அளவிலான வெண் சந்தனம் மற்றும் பாலை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்நிலையில், இவற்றை பொலிஸாரிடம் ஒப்படைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)

# மகா சிவராத்திரி நோன்பினை சிறப்பிக்க பிரதமர் ஆலோசனை



(கொழும்பு)

மகா சிவராத்திரி நோன்பினை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

சைவமக்களின் சிறப்பு விரதங்களில் ஒன்றான மகா சிவராத்திரி விரதம் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்தச் சிவராத்திரி நோன்பினை இந்து ஆலயங்களில் சிறப்புற நிகழ்த்துவதற்கு ஊக்கம் நல்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைய இலங்கையில் சைவத் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்ற பிரதேச செயலாளர் பிரிவுகளை மையப்படுத்தி, விசேட வழிபாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

இதன்போது, சைவச் சிறார்கள் ஆலயங்களுக்குச் சென்று மகா சிவராத்திரி நோன்பின் பெருமையை உணர்ந்து வழிபாடுகளில் ஈடுபடவும், இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பக்தி சார்ந்த கலை நிகழ்வுகளை நடத்தவும் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

மகா சிவராத்திரி விழாவை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்வதற்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பிரதேச செயலகங்கள் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட கோவில்களுக்கு பிரதமரின் ஆலோசனைக்கமைய நிதி வழங்கப்படவுள்ளது. (நி-4)

# இலங்கையில் இராணுவ மயப்படுத்தல்

## குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக சந்திரப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தில், இலங்கையில் இராணுவ மயப்படுத்தல் குறித்த குற்றச்சாட்டுகளை தாம் முற்றாக நிராகரிப்பதாக ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி சி.ஏ. சந்திரப்பெரும தெரிவித்துள்ளார்.

விசேட கலந்துரையாடல் ஒன்றின் போது அவர் இலங்கை தொடர்பான முதன்மை குழுவிடம் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

உடல்களை கட்டாயமாக தகனம் செய்வது குறித்த கொள்கை நாட்டில் கைவிடப்பட்டுள்ளதால், தீர்மானத்தில் அது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை அகற்ற வேண்டும்.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளுக்கு அரச துறையில் இணைந்துகொள்வதற்கான உரிமை எமது நாட்டில் உள்ளது.

மனித உரிமை நிலவரம் மோசமடைவது குறித்து முன்கூட்டிய ஆரம்ப எச்சரிக்கைகள் தென்படுவதாக தெரிவிக்கப்படுவது மிகைப்படுத்தப்பட்ட கருத்தே.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் சுதந்திரமானதில்லை, பக்கச்சார்பானதென அவர் தெரிவித்தார். (நி-4)

# கிழக்கை நோக்கிப் படையெடுக்கும் வெளிநாட்டுப் பறவைகள்



(மட்டக்களப்பு)

வெளிநாட்டுப் பறவைகள் கிழக்கு மாணத்தை நோக்கி படையெடுக்க ஆரம்பித்துள்ளன.

மட்டக்களப்பு -கல்முனை பிரதான வீதியில் ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட குருக்கள் மடம் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டுப் பறவைகள் வருகை தந்துள்ளன.

குறித்த பறவைகள் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளதாக துறைசார் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் அங்கிருந்து வரும் இப்பறவைகள் இப்பிரதேச மரங்களில் தங்கி முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்து தமது குஞ்சுகளுடன் மீண்டும் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் சென்று விடுவதாக அப்பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். (நி-4)

# ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட 16 பேருக்கு கொரோனா

(ஹற்றன்)

கொட்டகலை பகுதியில் 16 பேருக்கு கொரோனா தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளதாக கொட்டகலை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

கொட்டகலை பிரதேசத்திலுள்ள மூன்று பாடசாலைகளின் ஐந்து ஆசிரியர்களும் 7 மாணவர்களும் அடங்குவதாக பொது சுகாதார அதிகாரி தெரிவித்தார்.

மேலும் கொட்டகலை பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார். (நி-4)

# கொழும்பில் ஒட்சிசன் வாயுவின் அளவில் வீழ்ச்சி-சுற்றாடல் அமைச்சு

(கொழும்பு)

கொழும்பில் ஒட்சிசன் வாயுவின் அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் கொழும்பு நகரில் வளி மாசடைதலைத் தடுப்பதற்கு சுற்றாடல் அமைச்சும் கொழும்பு மாநகரசபையும் இணைந்து கூட்டு நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு நகரின் ஒட்சிசன் அளவினை நாள்தோறும் அளவீடு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (நி-4)

# ஒரே ஓவரில் ஆறு சிக்சர்

## அதிரடி காட்டிய பொல்லார்ட்



இலங்கை அணிக்கு எதிரான முதலாவது இருபது- 20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் கிரான் பொல்லார்ட் ஒரு ஓவரில் 6 சிக்ஸர்களை அடித்துள்ளார்.

அதனால் மேற்கிந்திய தீவுகள் அணியின் சுப்பர் ஸ்டாரான சகலதுறை ஆட்டக்காரர் பொல்லார்ட் சர்வதேச கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் 6 சிக்ஸர்களை அடித்த மூன்றாவது துடுப்பாட்ட வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபது- 20 தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்போட்டியில் அகில தனஞ்சய பந்துப் பரிமாற்றத்தை எதிர்கொண்ட பொல்லார்ட் தொடர்ச்சியாக ஆறு சிக்ஸர்களை விளாசித் தள்ளி இந்த சாதனையை நிகழ்த்தினார்.

இதனால் இருபது-20 கிரிக்கெட் அரங்கில் ஒரு ஓவரில் 6 சிக்ஸர்கள் அடித்த ஒரே பட்ஸ்மனாக திகழந்த முன்னாள் இந்திய அணியின் சகலதுறை ஆட்டக்காரரான யுவராஜ் சிங்குடன் பொல்லார்ட் இணைந்துள்ளார். (4)

# நியூசிலாந்துக்கு எதிரான 20 ஓவர் கிரிக்கெட்

## அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து அந்த அணிக்கு எதிராக 5 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி வெலிங்டனில் நேற்று முன்தினம் நடந்தது.

அவுஸ்திரேலிய அணியில் டேனியல் சாம்ஸ்க்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் ரிலே மெரிடித் அறிமுக வீரராக இடம் பிடித்தார். அவர் இந்த சீசனுக்கான ஐ.பி.எல். போட்டிக்கு பஞ்சாப் கிங்ஸ் அணியால் ரூ.8 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டவர். நியூசிலாந்து அணியில் சுழற்பந்து வீச்சாளர் மிட்செல் சான்ட்னெர் சளி மற்றும் காய்ச்சல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதால் மார்க் சாப்மன் சேர்க்கப்பட்டார்.

இதில் முதலில் பட் செய்த அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்கு 208 ரன்கள் குவித்தது. கப்டன் ஆரோன் பிஞ்ச் (69 ரன், 44 பந்து, 8 பவுண்டரி, 2 சிக்சர்), மக்ஸ்வெல் (70 ரன், 31 பந்து, 8 பவுண்டரி, 5 சிக்சர்) அரைசதம் விளாசினர். இதில் ஜேம்ஸ் நீஷம் வீசிய ஒரு ஓவரில் மக்ஸ்வெல் 4 பவுண்டரி, 2 சிக்சர் என்று 28 ரன்கள் திரட்டி அமர்க்களப்படுத்தியது.

அடுத்து மெகா இலக்கை நோக்கி ஆடிய நியூசிலாந்து அணியின் விக்கெட்டுகள் சீரான இடைவெளியில் சரிந்தன. தொடக்க ஆட்டக்காரர் டிம் செய்பெர்ட் (4 ரன்), கப்டன் கேன் வில்லியம்சன் (9 ரன்) விக்கெட்டுகளை அவுஸ்திரேலிய புதுமுக வேகப்பந்து வீச்சாளர் ரிலே மெரிடித் சாய்த்து ஆரம்ப ரன் வேகத்தை முடக்கினார். இடக்கை சுழற்பந்து வீச்சாளர் ஆஷ்டன் அகர் ஒரே ஓவரில் (13-வது ஓவர்) 3 விக்கெட்டுகளை வீழ்த்தி எதிரணியின் பட்டிங் வரிசையை நிலை குலையச் செய்ததுடன், கடைசி கட்ட விக்கெட்டுகளையும் வீழ்த்தி வெற்றியை எளிதாக்கினார். நியூசிலாந்து அணி 17.1 ஓவர்களில் 144 ரன்னில் 'ஓல்-அவுட்' ஆனது. இதனால் அவுஸ்திரேலிய அணி 64 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (4)

# முதலில் பணம்; பின்பே போட்டி

## ஐ.பி.எல். குறித்து வீரர் ஸ்டெய்ன்



தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீரர் டேல் ஸ்டெய்ன். கடந்த ஐ.பி.எல். போட்டியில் இவர் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் விளையாடினார்.

கடந்த ஜனவரி மாதம் ஐ.பி.எல். போட்டியில் இருந்து விலகுவதாக ஸ்டெய்ன் அறிவித்திருந்தார். உலகில் நடைபெறும் மற்ற லீக் போட்டிகளில் விளையாட இருப்பதாக தெரிவித்தார்.

இந்த நிலையில் ஐ.பி.எல். போட்டியில் பணத்துக்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கிரிக்கெட் பின்னால் சென்று விட்டது என்று ஸ்டெய்ன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறி இருப்பதாவது,

ஐ.பி.எல். போட்டியில் ஒவ்வொரு அணியிலும் அதிக எண்ணிக்கையிலான வீரர்கள் இருக்கிறார்கள். அதில் அதிக அளவில் பிரபல வீரர்கள் உள்ளனர். அவர்கள்போட்டியின்மூலம் ஈட்டும் பணத்துக்கு அதிக முக்கியத்துவம் தரப் படுகிறது.

ஒரு கட்டத்தில் அந்த போட்டியில் கிரிக்கெட் தன்மை பின்தள்ளப்படுகிறது. மற்ற லீக் போட்டிகளில் விளையாடுவதால் பெயர் கிடைக்கிறது.

பாகிஸ்தான், இலங்கையில் நடைபெறும் போட்டிகளில் கிரிக்கெட்டுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. இங்கு நான் இருக்கும் நாட்களில் கடைசியாக எந்த போட்டியில் விளையாடினேன். அது எவ்வாறு இருந்தது என்றுபேசுகிறார்கள். ஆனால் ஐ.பி.எல். போட்டியில் இருந்தால் யார் என்ன விலைக்கு வாங்கப்பட்டனர் என்பது குறித்த பேச்சு அதிகமாக இருக்கிறது. அதிலிருந்து நான் விலகியிருக்க விரும்புகிறேன். இவ்வாறு ஸ்டெய்ன் கூறியுள்ளார். (4)

# டோக்கியோ ஒலிம்பிக்கில்

## வெளிநாட்டு வீரர்களுக்கு தடை?

ஜப்பான்தலைநகர் டோக்கியோவில் கடந்த ஆண்டு நடக்க இருந்த ஒலிம்பிக் போட்டி கொரோனாப் பரவலால் இந்த ஆண்டுக்கு தள்ளிவைக்கப்பட்டு எதிர்வரும் 23ஆம் திகதி தொடங்கி ஒகஸ்ட் 8ஆம் திகதி வரை நடக்க உள்ளது.

உலகின்மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான இந்த ஒலிம்பிக் போட்டியில் வெளிநாட்டு ரசிகர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனா இன்னும் கட்டுக்குள் வராத தற்போதைய சூழலில் வெளிநாட்டு ரசிகர்களை ஒலிம்பிக் போட்டியை நேரில் பார்க்க அனுமதிக்க வாய்ப்பே இல்லை. இது பற்றி இந்த மாத இறுதிக்குள் இறுதி முடிவு எடுக்கப்படும்' என்று ஜப்பான் அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியதாக அங்குள்ள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே, ஜப்பானில் ஒலிம்பிக் போட்டியை நடத்த வேண்டுமா? வேண்டாமா? என்று அந்த நாட்டு மக்களிடம் நடத்தப்பட்ட கருத்து கணிப்பில் 58 சதவீதம் பேர் கொரோனா அச்சத்துக்கு மத்தியில் ஒலிம்பிக் போட்டியை நடத்த வேண்டாம் என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

ரசிகர்களை அனுமதிப்பது தொடர்பான கேள்விக்கு 47 சதவீதம் பேர் குறைந்த எண்ணிக்கையில் ரசிகர்களை அனுமதிக்கலாம் என்றும் 44 சதவீதம் பேர் ரசிகர்கள் வேண்டாம் என்றும் கூறியுள்ளனர். (4)

# இலங்கை அணியை பந்தாடியது மேற்கிந்திய தீவுகள்



இலங்கை அணிக்கெதிரான முதலாவது இருபது-20 போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில், 1-0 என்ற கணக்கில் மேற்கிந்திய தீவுகள் அணி முன்னிலை பெற்றுள்ளது.

ஆண்டிகுவா மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 131 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக பெத்தும் நிசங்க 39 ஓட்டங்களையும் நிரோஷன் டிக்வெல்ல 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 132 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 13.1 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் அந்த அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கியரன் பொல்லார்ட் 38 ஓட்டங்களையும் ஜேசன் ஹோல்டர் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியில் இலங்கையின் அணியின் அகில தனஞ்சய, ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தி சாதனை படைத்தார். (4)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அமரர் செம்பர் முருகேசு | அமரர் முருகேசு வரதநாயகி |
|---|---|
| தோற்றம் 03.08.1930 | தோற்றம் 08.11.1937 |
| மறைவு 09.09.2019 | மறைவு 15.02.2020 |

வருடமொன்றோடிப் போச்சா?

வாழ்க்கையும் வசதி வாய்ப்பும்

வரங்களும் தந்த ஐயா

முருகேசு அவரின் பாதி வரதநாயகியும்

இந்த மண்ணில் வாழ்வாங்கு வாழ்ந்து

மறைந்து ஓர் வருடமாச்சா?

மனம் ஏற்குதில்லை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மயூரன்ஸ் ஜவல்லறி
95,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(பேரப்பிள்ளை)

சந்திரலிங்கம்
சரோஜினிதேவி
(மகள்)

(C-1595)



வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ள சுகாதாரத் தொண்டர்கள் நேற்று வியாழக்கிழமை நான்காவது நாளாகவும் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாகத் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (படங்கள்: ரவிசாந், சிவசாந்தன்)

# நல்லூர் வளைவு அமைப்பு பணிக்காக வீதித் தடை

(யாழ்ப்பாணம்)

நாவலர் வீதியிலிருந்து நல்லூர் ஆலயம் வரையான கோவில் வீதியானது நல்லூரான் வளைவு அமைக்கும் பணிக்காக நாளை மறுதினம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் சுமார் ஒரு மாத காலத்திற்கு வாகனங்கள் பயணிக்க தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மாற்றுப் பாதையாக நல்லூர் ஆலயத்திலிருந்து கோவில் வீதியூடாகச் செல்லும் சிறிய ரக வாகனங்கள் செட்டித் தெரு வீதி, செட்டித்தெரு ஒழுங்கை (சின்மயா மிஷன் வீதி) ஊடாகச் சென்று நாவலர் வீதியை யும் நாவலர் வீதியால் வரும் வாகனங்கள் செட்டித் தெரு வீதி, செட்டித்தெரு ஒழு ங்கை (சின்மயா மி ஷன் வீதி) ஊடாகச் சென்று கோவில் வீதியையும் அடையலாம்.

கனரக வாகனங்கள் இக் காலத்தில் இப்பகுதியில் பயணிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது என யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (5-4)

## அலுவலகம் திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தொகுதிக்கான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகம் இன்று வெள் ளிக் கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு சாவகச்சேரி தபால் கந்தோர் வீதிச் சந்தியில் திறந்து வைக்கப்பட்ட இருப்பதாக கட்சியின் தென்மராட்சி இணைப்பாளர் சர்வானந்தன் தெரிவித்து ள்ளார்.

இந்நிகழ்வில் அமைச்சர்களான ரமேஷ் பத்திரன மற்றும் அருந்திக்க பெர்னாண்டோ ஆகி யோர் கலந்து கொள்வர். (5-4-30)

# வரணி பொது நூலகத்தை பாதுகாக்க கோரிக்கை


(வரணி)

தென்மராட்சி வரணி பிரதேசத்தில் அமைந்துள்ள பொது நூலகமானது சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட நூலகமாகும்.

அதுமட்டுமன்றி வரணி பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரேயொரு நூலகமாகவும் காணப்படுகிறது.

இதற்கு சுற்றுமதில் அமைக்காமையால் கால் நடைகள் உட்புகுவதோடு பாதுகாப்பு பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

ஆகவே வரணிப் பொது நூலகத்திற்கு சுற்றுமதில் அமைப்பதற்கு பிரதேச சபையினர் நடவடிக்கையெடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (5-4-103)



தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மகிழ்ச்சிக்கான வழி தேடி எனும் தொனிப் பொருளில் இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சி பட்டறை கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் சென்.சேவியர் பொதுநோக்கு மண்டபத்தில் சம்மேளன தலைவர் கஜிதரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒன்றுகூடுவோம் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் நக்கீரன் கலந்து கொண்டார். (படம்:-சுபேசன்)

## விசா விண்ணப்பங்களை புதன்கிழமைகளில் கையளிக்க முடியும்

(நல்லூர்)

கொவிட்-19 காரணமாக 2020 மார்ச் 13ஆம் திகதி மூடப்பட்ட யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள இந்திய விசா சேவைகளுக்கான (IVS) விண்ணப்ப மையமானது நேற்று முன்தினம் 3 ஆம் திகதி முதல் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளதாக இந்திய துணைத்தூதரகம் அறிவித்துள்ளது.

இந்திய விசா சேவைகளுக்கான (IVS) விண்ணப்ப மையத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் முற்பகல் 9 மணி முதல் 1.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொவிட் -19 காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ள சுற்றுலா விசா தவிர்ந்த ஏனைய அனைத்து வகை விசா விண்ணப்பங்களும் இங்கு ஏற்றுக்கொள்ளப் படும்.

விண்ணப்பதாரர்கள் IVS விண்ணப்ப மையத்தில் பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்துவதன் மூலம் தங்களது விசா வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களை (பாஸ்போட்) தபால்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

அல்லது IVS விண்ணப்ப மையத்தில் புதன்கிழமைகளிலும் அல்லது தூத ரகத்திலிருந்து வேலை நாட் களில் பிற்பகல் 5 மணி முதல் 5.30 மணிவரை நேரடியாக தமது கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அவசர தேவைகளுக்கான விண்ணப்பதாரர்கள் புதன்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் முற்பகல் 9 முதல் நண்பகல் 12 மணி வரை நேரடியாக யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் விசா விண்ணப் பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

இலத்திரனியல் விசா விண்ணப்பம் மற்றும் பல்வேறு வகை விசாக்களுக்கு தேவையான ஆவணங்கள் மேலும் பிற தேவைகள் குறித்த தகவல்களுக்கு துணைத் தூதரகத்தின் இணையத்தளமான "cgijaffna.gov.in" இல் உள்ள "விசா" மெனுவைப் பார்வையிடவும். (5-4-33)

# விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இணுவில் திருப்பதி அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆயைத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத் தின்பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ சோ. பிரசன்னக்குருக்களின் அருளாசி உரை யும் வேதபாராயணமும் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலி பரப்பு செய்யப்படும். (5-4)






சமூகநல அமைப்பான Che Foundation இன் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியில் அமைந்துள்ள LIC Lanka Ltd கட்டட மண்டபத்தில் நடைபெற்றது. இந்த இரத்ததான முகாமில் ஐந்து யுவதிகள் உட்பட 33 பேர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். (படம்:- ரவிசாந்)

## மத்தியஸ்தர் சபை அமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபையின் விசேட அமர்வுகள் நாளை மற்றும் நாளை மறுதினம் யாழ். மத்திய கல்லூரிக்கு அருகில் உள்ள கிறிஸ்தவ தேவாலய மண்டபத்தில் இடம்பெறும்.

எனவே பிணக்குடன் தொடர்புபட்டவர்கள் குறித்த இடத்திற்கு காலை 9.30 மணிக்கு வருகை தருமாறு தலைவர் ரி.தேவதயாளன் அறிவித்துள்ளார். (5-4)

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் - 2021

வடக்கு மாகாண சுகாதார அமைச் சின் கீழ்வரும் வைத்தியசாலைகளில் நிலவும் வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்பும் தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை 25.03.2021 ஆம் திகதிக்கு முன்னர் "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**01. ஆட்சேர்ப்பிற்கான சேவை நியந்தனைகள் :-**

- வைத்திய உத்தியோகத்தர் கடமைகளை ஆற்றுவதற்கான உடல் உள ஆரோக்கியத்தை தகுதிச் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
- விண்ணப் ப முடிவுத்திகதியில் 65 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- வட மாகாணத்தில் காணப்படும் வைத்திய உத்தியோகத்தர் வெற்றிடங்களின் அடிப்படையில் செயலாளர், சுகாதார அமைச்சு, வடக் கு மாகாணம் அவர்களினால் பணிக்கப்படும் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
- அரச வைத்திய உத்தியோகத்தர் சேவையில் கடமையாற்றி முறையாக ஓய்வு பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- வைத்திய உத்தியோகத்தர் சேவையில் தாமாகவே பதவியை விட்டு விலகிய (V.O.P) அல்லது ஒழுக்காற்று காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெற்றவரல்லாதவராக இருத்தல் வேண்டும்.

**02. சம்பளம்:-**

நடைமுறையிலுள்ள சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

**குறிப்பு:-** ஆளணி வெற்றிட விபரம் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் என்பனவற்றை **www.np.gov.lk / Recruitment and Exam / Advertisement** என்ற வடக்கு மாகாணசபையின் இணையத்தளம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

சி.திருவாகரன்,
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
05.03.2021

(C-1599)

வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



## மனவளக்கலை யோகப் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் பெருமையுடன் வழங்கும் எளிய முறை யோகப் பயிற்சிகள். அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- எளிய முறை உடற்பயிற்சிகள்
- எளிய முறை தியானப் பயிற்சிகள்
- காயகல்பப் பயிற்சிகள்
- அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்:- எதிர்வரும் 06.03.2021 சனிக்கிழமை தொடக்கம் 12.03.2021 வெள்ளி வரை
நேரம்:- மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணிவரை
பயிற்சி வழங்குபவர்:- துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன் அவர்கள்

குறிப்பு:கொவிட்-19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

தொடர்புகளிற்கு:- யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்,
இல.81,பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்
தொ.இல. 021 222 2772

(C-1597)

## நன்றி கூறுகிறோம்

ND 9776 எனும் இலக்கத்தையுடைய இலங்கை போக்குவரத்துச் சபையின் கொழும்பு - பருத்தித்துறை சேவையில் ஈடுபடும் B.பாலமயூரன் (நடத்துநர்), P.இரகுநாதன் (சாரதி) ஆகியோர் பேருந்தில் தவறவிடப்பட்ட எமது பொருட்களை பெற்றுத் தந்தமைக்காக நன்றி தெரிவிக்கின்றோம்.

(C-1594)

S.M. சமந்தகுமார (பொருட்களின் உரிமையாளர்)

# 45 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 20.01.2021 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்ப விளக்கு

## அமரர் கிருஷ்ணன் பிரதீபன் (மணி)

திதி: பூர்வபட்ச அட்டமி



அன்பாய் சிரித்து பேசி
எம்முடன் கூட இருந்த நீங்கள்
இன்று எம்முடன் இல்லை என்பதை
எண்ணிப் பார்க்க
இதயம் ரணமாய் வலிக்கிறது
உங்கள் ஆத்மா இறைவன் திருவடியில்
சங்கமிக்க இறைஞ்சுகின்றோம்.

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 05.03.2021 வெள்ளிக்கிழமை காலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 13.08.1982 மறைவு 20.01.2021

கைலந்தோட்டம் அல்வாய்,
கிழக்கு அல்வாய்.

குடும்பத்தினர்

(C-1582)

# எடுக்கும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என பொது அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

நீண்ட இடைவெளிகளில் கூட்டங்கள் நடத்தப்பட்டாலும் கூட்டங்களில் அதிரடியாக பல தீர்மானங்கள் எடுக்கப்படும். ஆனால் எடுக்கப்படும் தீர்மானங்கள் பெருமளவில் நிறைவேற்றப்படுவதில்லை.

கிராமங்களுக்கான பேருந்து சேவை உட்பட பல தீர்மானங்கள் எடுக்கப்படும். ஆனால் அவை நடைமுறைப்படுத்தப் படுவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். (5-4-350)

# மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா

(கண்டாவளை)

**சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலுக்கு அமைவாக பாதிப்புகள் எதுவும் ஏற்படாத வகையில் கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவத்தினை மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் நடத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.**

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ள நிலையில் அதற்கான ஆலோசனைக்கூட்டம் நேற்று புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் கருத்து தெரிவித்த அவர், சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வருகின்ற பக்தர்களுக்கு அல்லது மாவட்டத்தில் இருக்கும் மக்களுக்கும் எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் பொங்கல் உற்சவத்தை நடத்த ஏற்பாடு செய்யுமாறும் அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து குறித்த ஆலயத்தில் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் மாத்திரமே இந்த பொங்கல் உற்சவத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பக்தர்களை அனுமதிப்பது ஆலயத்தின் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல் என்பவற்றை பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறையினர் ஆலய நிர்வாகம் சரியான முறையில் முன்னெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

குறித்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர், பக்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (5-4-315)

# கரிப்பட்டமுறிப்பு பகுதிக்கு பேருந்து சேவை தேவை

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கரிப்பட்டமுறிப்பு, புதிய நகர் கிராமத்திற்கு பேருந்து தேவை என அப்பகுதி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் வழியாக மாங்குளம் வரை தனியார், இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன.


கரிப்பட்டமுறிப்பில் இருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள புதிய நகர் கிராமத்திற்கு பேருந்து சேவை இடம் பெறுவதில்லை எனவும் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் பேருந்து சேவை இடம் பெற்றதாகவும் தற்போது சேவை இடம்பெறுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அண்மையில் நடைபெற்ற ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒதியமலை, பேராறு, கற்சிலைமடு ஆகிய பகுதிகளுக்கு பேருந்து சேவை நடத்தப்பட வேண்டும்.

குறிப்பாக ஒதியமலைக் கிராமத்திற்கான சேவைகள் கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக நடைபெறுவதில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் அம்பகாமம் கிராமத்திற்கு பேருந்து சேவை நடத்துவது என எடுக்கப்பட்ட தீர்மானம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-350)



புலம்பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவு ஒருவரின் ஐம்பதாயிரம் ரூபாய் நிதிப்பங்களிப்பில் வவுனியா பாலமோட்டை பகுதியில் வசித்து வரும் வசதியற்ற பெண் தலைமைக் குடும்பம் ஒன்றிற்கு தெற்கு தமிழ்ப்பிரதேச சபை உறுப்பினர் திருமதி. கோகிலகுமார் அஞ்சலாவின் ஊடாக கோழிகளுடன் கோழிக்கூடு நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

(படம்:-சதீஸ்)

# யானை வேலி அமைக்கப்படாமையால் தினம் தினம் பாதிப்படையும் மக்கள்

(அக்கராயன்)


யானை வேலிகள் அமைக்கப்படாததன் காரணமாக காட்டு யானைகளால் தென்னைகள் போன்ற பயன் தரு மரங்கள் நாள்தோறும் அழிக்கப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

விசுவமடுவில் இருந்து புதுக்குடியிருப்பின் கைவேலி வரையான 36 கிலோ மீற்றருக்கு யானை வேலிகள் அமைக்கப்பட வேண்டும். இப்பகுதியின் ஊடாக நாள்தோறும் வருகின்ற யானைகள் ஒரு நாளில் 200 வரையான தென்னைகளை அழிக்கின்றன. யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுப்பதில்லை. மாலை நேரங்களிலேயே யானைகள் கிராமங்களுக்குள் நுழைந்து அழிவுகளை ஏற்படுத்துகின்றன.

கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல கிராமங்கள் யானைகளினால் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

விவசாயத்திற்கும் வாழ்வாதார முயற்சிகளுக்கும் பெரும் அழிவுகளை ஏற்படுத்தும் யானைகளை காடுகளில் நீண்ட தூரம் கலைத்துச் சென்று விடுவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. (5-4-350)

# வெடிக்காத நிலையில் ஷெல் மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட மோட்டார் ஷெல் மற்றும் ஆர்பீஜி ஷெல் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள தனியாருக்குரிய தோட்டக் காணியொன்றினை சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அங்கு வெடிபொருட்கள் இருப்பது தொடர்பாக நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு அருகாமையிலுள்ள இராணுவத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற இராணுவம் மற்றும் பொலிஸார் மண்ணிற்குள் புதையுண்ட நிலையில் காணப்பட்ட வெடிபொருட்களை மீட்டுள்ளதுடன், அதனை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)

# யானைத்தந்தம் மற்றும் கஞ்சாவுடன் ஐவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா - நெடுங்கேணி பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் நால்வரையும் யானைத் தந்தத்துடன் ஒருவரையும் நேற்று முன்தினம் இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

நெடுங்கேணி பகுதியில் நேற்று முன்தினம் மாலை நால்வர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து சென்றுள்ளனர். குறித்த நால்வரையும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் சோதனை செய்த போது சிறு சிறு பொதிகளாக உடைமையில் வைத்திருந்த 250கிராம் கேரளக் கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர் ஒருவரின் வீட்டை சோதனையிட்ட போது யானைத் தந்தங்கள் கைப்பற்றப்பட்டன. அவரின் தந்தையையும் கைது செய்த இராணுவத்தினர் ஐவரையும் நெடுங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)

# இராசிபலன்

**05.03.2021**
**மாசி 21, வெள்ளிக்கிழமை**
**சப்தமி பின்னிரவு 12.01 மணிவரை**
**அனுசம் பின்னிரவு 2.24 மணிவரை**
**சுபநேரம் 6.26-7.56 மணிவரை**
**இராகுகாலம் 10.56-12.26 மணிவரை**
**சந்திராஷ்டமம் - அச்சுவினி, பரணி**

வளவன்

**மேஷம்**
உடல் நலனில் கவனம் தேவை, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**ரிஷபம்**
நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கடன் தொல்லைகள் குறையும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**
வியாபார விருத்தி ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**கடகம்**
நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், உறவினர் பகை மாறும்.

**சிம்மம்**
இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், தொல்லை கொடுத்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன்வருவர், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி**
உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், வழிபாடு காரிய வெற்றி தரும், நீண்ட நாளை பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**துலாம்**
புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், தொழில் வளர்ச்சி கூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்**
வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் பகை அகலும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு**
இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மகரம்**
வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்**
அருமையான நாள், உள்ளம் மகிழும் வகையில் சில சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர்.

**மீனம்**
திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர், காரிய அனுகூலமுண்டு, எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

எந்தச் சமயத்திலும் எவரையும் சொல்லாலோ செயலாலோ புண்படுத்தாதவனே மிகப் பெரிய மனிதன்


# குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இலவச மின்சாரம்- அரசு நடவடிக்கை

(கொழும்பு)

**இதுவரை மின்சார வசதியில்லாத குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் சமுர்த்தி பெறுநர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும் என மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

குறைந்த வருமானம் பெறு பவர்களுக்கு இலவசமாக மின் சாரத்தை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில் நாளை முதல் அவர்களுக்கு மின்சாரத்தை வழங்க சகல நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



மேலும் மின்சாரம் இல்லாத வீடுகளை அடையாளம் கண்டு, ஆண்டு இறுதிக்குள் அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.(றி-4)


# பகிரங்க அறிவித்தல்
## பூநகரி பிரதேச சபை- கிளிநொச்சி

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டம் மற்றும் சபை நிதியின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பூநகரி பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்வதற்காக கீழ்வரும் உருவச் சிலையினை அமைத்தல் வேலைத்திட்டம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வேலைத்திட்டத்தின் பெயர், நிதிமூலம், ஒதுக்கீட்டுத்தொகை மற்றும் சிலை அமைக்கப்படவுள்ள இடம் போன்ற விபரங்கள் கீழ்வரும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளது.

| இல | சிலையின் பெயர் | தொகை | இடம் |
|---|---|---|---|
| 1 | பல்லவராயன் மன்னன் சிலை அமைத்தல் | 500,000.00 | பல்லவராயன் கட்டுசந்தி |

தற்போது இவ் உருவச் சிலையினை அமைப்பதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சபையினால் அனுமதிக்கப்பட்டு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இவ் உருவச்சிலை அமைப்பதில் உருவச்சிலை தொடர்பாகவோ அல்லது உருவச்சிலை அமையப்போகும் இடம் தொடர்பாகவோ யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இவ் அறிவித்தல் வெளியிட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபாலில் செயலாளர், பூநகரி பிரதேச சபை, வாடியடி, பூநகரி என்ற முகவரிக்கு எழுத்து மூலம் தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

(சி-1598)

பூநகரி பிரதேச சபை,
வாடியடி,பூநகரி.

அருணாசலம் ஐயம்பிள்ளை,
தவிசாளர்.



# முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்- 2021

**07.03.2021 அன்று நடைபெற இருந்த முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் தவிர்க்க முடியாத காரணங்களால் 21.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். பதிவு செய்த அங்கத்தவர்களனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**


**புதிய அங்கத்தவர்கள் 21.03.2021, காலை 08.30 மணி தொடக்கம் முற்பகல் 10.00 மணி வரை பாடசாலையில் நேரடியாக பதிவுகளை மேற்கொள்ளலாம் அல்லது விண்ணப்பப்படிவத்தினை பழைய மாணவர் சங்கத்தின் முகநூல் பக்கத்தினூடாக** (www.facebook.com/vidyananda.college) **தரவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் மென்பிரதியை 18.03.2021 இற்கு முன்னர் பழைய மாணவர் சங்கத்தின் மின்னஞ்சலூடாக** (vidyanandaosa@gmail.com) **அனுப்புவதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.**

மேலதிக விபரங்களுக்கு:
**077 7402307, 077 9362643, 077 3643971.**

(சி-1602)

பழைய மாணவர் சங்கம், முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி.

# யாழ்.நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா
# உயர்திரு.தி.ரவீந்திரநாதன் அவர்



## அருளாசிச் செய்தி


"தோன்றிற் புகழோடு தோன்றுக" என்பார்கள். அந்த வகையில் இன்று அறுபது அகவை காணும் அதிபர் திரு.தில்லை நாதன் ரவீந்திரநாதன் அவர்கள் கலைமகள் மற்றும் திருமகள் அருட்கிருபையினால் எல்லா நலமும் பெற்றுச் சீரோடும் சிறப்போடும் பேரோடும் புகழோடும் வாழ வேண்டும் என்று வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இவர் சமய, சமூக நிறுவனங்கள் பலவற்றில் அங்கம் வகிப்பதோடு மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்து சேவைக்காகவே தன்னை அர்ப்பணித்த அருமையான மனிதர் என்று கூறினால் மிகை யாகாது. பல பாடசாலைகளில் பணியாற்றி அதன் வளர்ச்சிக்காகபாடு பட்டது மாத்திரமன்றி நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியால யத்தை தம்முடைய பெரு முயற்சியினால் முன்னுக்குக் கொண்டு வந்ததை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

மேலும் நீர்வேலி சி.சி.த.க.பாடசாலையின் பெரு வளர்ச்சிக்கு தன்னாலான மட்டும் சேவையாற்றியதுடன் அதில் கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கு அர்ப்பணிப்போடு அளப்பரிய சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இப்பேர்ப்பட்ட இவர் இன்னும் நீண்ட நாள் வாழ்ந்து யாழ்ப் பாண சமூகத்துக்கு நல்ல பணியாற்றி நலமுடன் வாழ வேண்டும் என்று அருளாசி கூறி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், ஆதீன குருமுதல்வர்**



## மேனாள் துணைவேந்தர் வாழ்த்து

அதிபர் தி.ரவீந்திரநாதன் அவர்களின் மணிவிழாவை வாழ்த்தும் இவ்வேளை பெறுமதியானது. ஆசிரியத்தின் அருமையை உணர்ந்த ஆளுமையாய் எங்கள் கல்விப்புலத்தில் தடம் பதித்தவர் ரவீந்திரநாதன்.

கல்வியில் சம நீதி என்ற இலக்கினை உறுதிசெய்யும் அவர் செயல் வீரத்தினை அண்மையிலும் சேய்மையிலும் நயந்துள்ளேன். அதிக கவனிப்பை வேண்டி நிற்கும் எங்கள் சிறிய பாடசாலைகளின் அதிபராய் சமூக உணர்திறனோடு அவராற்றிய பணிகள் ஏனையோருக்கு வழிகாட்டியானவை. பாடசாலையின் வள மேம்பாட்டுக்குச் சமாந்தரமாக பயிலும் பிள்ளைகளின் உள சமூக மேம்பாட்டில் அவர் கொண்ட அர்ப்பணிப்பு மேலானது. அதுவே இன்றைய மணிவிழா கொண்டாட்டத்தின் அடி நாதமானது என்பேன்.

பணி ஓய்வு என்பது வயதினால் வருவது. பண்பாட்டில் வாழும், சமூக மேம்பாட்டுக்காய் செயற்படும் அதிபர் ரவீந்திரநாதன் பணி அழகாய் தொடரட்டும். அழகிய குடும்ப வாழ்வின் நலம் யாவும் பெருகட்டும்.

எல்லையிலா அன்புடன் மணிவிழா வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்**
**மேனாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



## மணிவிழா வாழ்த்துரை

ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறுகளிலிருந்து இலங்கை ஆசிரியத் துறையிலும் கல்வித்துறையிலும் ஏனைய துறையிலும் சிறப்புற விளங்கி தனக்கென தனித்துவமான இடம் பிடித்தவரும் அதிபர் தனது ஆரம்ப நியமனத்தினை ஆங்கில ஆசிரியராக ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் ஆரம்பித்து தொடர்ந்து பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராக கடமை புரிந்து 2012 ஆம் ஆண்டு பதவியுயர்வு பெற்று அதிபராகி தனது சேவையினை சிறப்புற இன்றுவரை தொடர்ந்து வந்தார்.

யாழ்.மண்ணில் கல்விப்புல வளர்ச்சிக்காக மிகப் பற்றுறுதியுடனும் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் சவால்களுக்கு முகம் கொடுத்து ஏழை எளியவர்கள் என்ற பாகுபாடின்றி அனைவருடனும் நட்புடனும் கடமையுணர்வுடனும் பழகினார். சத்திய வழியும் மதப்பற்றும் சகோதரத்துவ மனப்பான்மையும் உதவி புரியும் மனோபாவமும் கொண்டு சமூக மட்டங்களிலும் மிகப்பெரும் தொண்டனாகி தலைவனாகி திகழ்ந்தார்.

தனது பாடசாலையின் பௌதிக வள அபிவிருத்திக்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அபிவிருத்தியினை முன்னோக்கி நகர்த்தினார். கல்வி உலகிற்கு இவர் ஆற்றிய சேவை மிக அளப்பரியது. இன்று அறுபது வயதை நிறைவு செய்து மணிவிழாக் காணும் திரு.தில்லை நாதன் ரவீந்திரநாதன் அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதோடு ஓய்வு காலம் சிறப்புற அமைந்து தேகாரோக்கியத்துடனும் மகிழ்வுடனும் வாழ வாழ்த்தி இறைவன் ஆசிகள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**சாம்பசிவம் சுதர்சன்**
**பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**



## ஆசிச் செய்தி

திரு. தி.ரவீந்திரநாதன் அவர்களை நான் 2018 ஆம் ஆண்டு சி.சி.த.க. பாடசாலையில் சந்தித்தேன். நான் அதே பாடசாலையில் 1958 - 1959 ஆண்டுகளில் படித்தேன். அப்பாடசாலையில் எவ்வளவு மாற்றங்கள்! எவ்வளவு முன்னேற்றங்கள்! ரவீந்திரநாதன் அவர்களின் முயற்சியால் தான் இம்மாறுதல்கள் ஏற்பட்டன என்று அறிந்தபோது அவர் மீது எனக்கு மிகுந்த மரியாதை ஏற்பட்டது.

இப்போது அவருக்கு 60 ஆம் ஆண்டு நிறைவு விழா நடைபெறுவதாக அறிந்தேன். மேலும் அவர் பல சமூகத் தொண்டுகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவந்தது. அவர் சேவை மேன்மேலும் தொடர இறைவன் அவருக்கு நல்ல ஆரோக்கியத்தையும் தனது அருளையும் கொடுப்பாராக என்று பிரார்த்திக்கிறேன்.

**சுவாமி அக்ஷராத்மானந்த**
**தலைவர், இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு**



## சேவை நயப்புரை

நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலய அதிபராக பெரும் பங்காற்றி பணி ஓய்வு பெறும் அதிபர் உயர்திரு தில்லைநாதன் ரவீந்திரநாதன் அவர்களது சேவையை பாராட்டி வெளியிடப்படும் மணி விழா மலருக்கான சேவை நயப்புரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பல நூற்றுக்கணக்கான மாணவர்களையும் அவர்களது ஒழுக்க பண்புகளையும் இதற்கு மேலாக பாடசாலை நிர்வாகத்தையும் ஆற்றும் அதிபரின் பணிப்பொறுப்பை அனைவரும் அறிவோம். அந்த வகையில் ஒரு ஆசிரியராக, அதிபராக இவை எல்லாவற்றையும் விட சமூகத்தில் ஒரு நல்ல வழிகாட்டியாக உயர்திரு. தில்லைநாதன் ரவீந்திரநாதன் அவர்கள் தமது பணியை திறம்பட நடத்தியுள்ளார்.

பணி ஓய்வு என்பது வெறுமனே ஒருவர் ஆற்றி வந்த வேலையில் இருந்தான ஓய்வு மட்டுமே. ஆனால் அவரது அறிவையும் முதிர்ந்த அனுபவத்தையும் தலைமைத்துவப் பண்புகளின் பலனையும் சமூகமானது அவரது பணி ஓய்வின் பின்னரே முழுமையாகப் பெற்றுக் கொள்ளும். இன்று சமூகத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இந்த அரச பணியில் இருந்து வெளியேறும் உயர்திரு. தில்லைநாதன் ரவீந்திரநாதன் தனது மக்களுக்கான சேவைகளை சமூகத்திற்கு வழங்கும் மிகப் பெரும் பொறுப்புடனேயே செல்கின்றார். தாங்கள் நலமுடன் பல்லாண்டுகள் சமூக சேவையாற்ற இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றேன். அவர் இதுவரை ஆற்றி வந்த பணிகளுக்கு நன்றிகளையும் இனி முழுமையாக சமூகத்திற்கு ஆற்றவுள்ள பெரும் பணிக்காக வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

நல்வாழ்த்துக்கள்

**ச.பாலச்சந்திரன்**
**இந்தியத் துணைத் தூதுவர், யாழ்ப்பாணம்.**



## வாழ்த்துரை

எமது பாடசாலையிலே இருபத்திரண்டு (22) மாதங்களே அதிபராக பணியாற்றிய திரு.தில்லைநாதன் ரவீந்திரநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டுவதில் பாடசாலைச் சமூகம் பெருமிதமடைகின்றது. அன்பும் அறிவும் இறைபக்தியும் கொண்ட அதிபர் அவர்கள் நிர்வாகத் திறமைமிக்கவர். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உதவி பெற வேண்டிய இடங்களிலே உதவிகளைப் பெற்று சிறுவர் பூங்கா, திறன் வகுப்பறை, அலுவலகம், அலுவலகத்துடன் இணைந்த மேற்கூரை, பாடசாலை சுற்றுமதில், முன்பக்கம் வர்ணப்படங்கள், நடைபாதை, வகுப்பறைகள் என்பவற்றை அமைத்து பாடசாலையை வளமாக்கியவர். அத்துடன் கணனிகள், போட்டோ பிரதி இயந்திரம், ஸ்கானர், பிறிண்டர், கற்றல் உபகரணங்கள் என்பவற்றை பல்வேறு நிறுவனங்களூடாக பாடசாலைக்கு பெற்றுத் தந்தவர். கடந்த 2019 க.பொ.த.(சா/த) பரீட்சையிலே 100% சித்தியைப் பெற்ற பெருமிதமும் இவரது நிர்வாகத் திறமைக்கு சான்றாக உள்ளது. ஆங்கில ஆசானாக விளங்கி அதிபராக மிளிர்ந்து சமாதான நீதவானாகவும் சேவையாற்றுகின்ற இவர் சமுதாயத்திலே பல்வேறு பதவிகளிலும் சிறந்து விளங்குகின்றார். இவரது சேவையை பாராட்டுவதோடு ஓய்வு காலம் சிறப்பாக அமையவும் உடல் உள ஆரோக்கியத்துடன் குடும்பத்தினருடன் நிறைவாக வாழ எல்லாம் வல்ல இறைவன் அருளை வேண்டி வித்தியாலயக் குடும்பம் சார்பாக வாழ்த்துகின்றேன்.

**திருமதி.A.S.சாள்ஸ்**
**பிரதி அதிபர், யா/நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வர வித்தியாலயம், மணிவிழாச் சபை உபதலைவர்.**



## "ஆச்சார்ய

ஆச்சார்யர்களை
றுக என்று இந்துக்க
களில் ஒன்றான தை
கூறப்பட்டுள்ளது. ஆ
பொழுது உலகியல் அ
யர்களையும் ஞானத்
குருவையும் குறிக்கு
இவ்வாறு போற்ற
சேவையில் தன்னை
நல்மாணாக்கர்களை உருவாக்கிய ஆசிரியர் / அ
தன் அவர்கள் இன்று தனது அறுபதாவது வயது நி
யில் இருந்து ஓய்வு பெறுகின்றார். அரச பணியில் இ
லும் அவர்களது அனுபவம் ஆளுமை மிக்க சேவை
திற்குத் தேவை. ஆதலால் தொடர்ந்தும் எமது இளம் ச
வளர்ச்சிக்கு ஆற்றலை வளர்ப்பதற்கு உதவ வேண்டு
மேலும் அவர்களது ஓய்வுக்காலம் வாழ்வு அ
மாக ஆன்மிக தேடலுடன் சிறப்புற அமைய ஆ
வல்ல நல்லைக் கந்தப் பெருமானையும் பிரார்த்தி


**இறை பணியில்,**
**தவத்திரு வேலன் சுவாமிகள், சிவகுரு ஆதீன**



## வாழ்த்

கல்வித் துறையி
அரும்பணியாற்றி தன
ஓய்வு பெறுகின்ற திரு
திரநாதன் அவர்கள்
லும் பின்னர் அதிப
வேசித்து இறுதியாக
விக்னேஸ்வரா வித்தி
கத் தனது பணிகளை
றார். கல்விப் புலத்தில் வலிகாமம் வலயத்திலும் ய
திலும் இவர் கடமையாற்றியுள்ளார்.
கல்வித் துறையில் மட்டுமன்றி பல சமுக சேவை
ஆலய பரிபாலன சபைகளிலும் பல பதவிகளை
கல்விப் புலத்தில் இவரது ஆசிரியர் சேவைக் கால
காலமும் அவரிடம் கற்ற மாணவர்களாலும் அ
பணியாற்றிய சக உத்தியோகத்தர்களாலும் இன்று
மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பல
செயற்பாடுகளை ஆற்றியவர்.
திரு.ரவீந்திரநாதன் அவர்கள் சிறந்த பண்ப
சுபாவமுடையவர், தனது பாடசாலையைத் திறம்ப
ன்பதில் அக்கறையுடன் செயற்பட்டவர். இவரது
றும்.
தொடர்ந்து தனது கல்விப் பணிகளையும் ச
மக்களுக்காக ஆற்றுவார். எனது மனமுவந்த வா
டுக்களும்.

**செல்வரட்ணம் சந்திரரா**
**கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் கல்வி வலய**



## வளடமுடன் வாழ

இன்று தமது 60 அ
கொண்டாடும் திருவ
ரவீந்திரநாதன் அவர்க
டனும் வாழ வேண்டு
பிரார்த்தித்து ஆசி நல்
இவர் நீர்வேலி
யின் வளர்ச்சியில் த
அர்ப்பணித்து அரும்ப
டத்தக்க ஒன்றாகும். மிக வறிய மாணவி யின் குடு
ரூபா பெறுமதியான வீடு கட்டிக்கொ டுத்தமைய
புலமைப்பரிசில் பரீட்சையில் 100% சித்தி பெற்ற
வாக இருந்தமையும் அரிய பணியாகும்.
மேலும் 2019 இல் க.பொ.த.சாதாரண தரப் ப
கள் 100% சித்தி பெறப்பாடுபட்ட இவரது அளப்பரிய
ஆத லால் இவரது சேவை நாட்டுக்குத் தேவை
வணங்கி ஆசி வழங்கி வாழ்த்துகின்றோம்.
இவர் இன்றுபோல் என்றும் சுகதேசியாக வா
காலம் நலமுடன் வாழ வேண்டுமென்று எல்லா
கந்தனைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்தி நிற்கின்றே
"பல்லாண்டு வாழ்க! பண்புடன் வாழ்க!!"

**"தெய்வத் தமிழ்ச்சுடர்" கலாபூ**
**திரு.இராசையா ஸ்ரீதரன், ஆன்மீக எழுத்**
**சமயப் பிரசாரகரும்.**

# ரா வித்தியாலயத்தில் அரும்பணியாற்றிய
# ர்களின் மணிவிழா சிறப்பு மலர்

### ச்சார்ய தேவோபவ"

யர்களைத் தெய்வமாகப் போற்
இந்துக்களின் முக்கிய நூல்
ான தைத்திரிய உபநிஷத்தில்
ளது. ஆச்சார்யார் எனப்படும்
லகியல் அறிவைத் தரும் ஆசிரி
ஞானத்தை வழங்கும் ஞான
குறிக்கும்.
து போற்றப்படக்கூடிய ஆசிரிய
தன்னை அர்ப்பணித்து பல
ிரியர் / அதிபர் திரு.ரவீந்திரநா
வயது நிறைவில் அரச சேவை
ணியில் இருந்து ஓய்வு பெற்றா
க சேவை எமது இளம் சமுதாயத்
து இளம் சமுதாயத்தின் ஆளமை
வேண்டும் என்பதே எமது அவா.
வாழ்வு அமைதியாக ஆனந்த
மைய ஆசி வேண்டி எல்லாம்
பிரார்த்திக்கின்றோம்.

ில்,
ரு ஆதீனம், யாழ்ப்பாணம்.

### வாழ்த்துகள்

துறையில் 30 ஆண்டுகள்
பாற்றி தனது 60 ஆவது வயதில்
கின்ற திரு.தில்லைநாதன் ரவீந்
அவர்கள் ஆசிரியர் சேவையி
ர் அதிபர் சேவையிலும் பிர
றுதியாக நல்லூர் தெற்கு ஸ்ரீ
ரா வித்தியாலயத்தில் அதிபரா
பணிகளை நிறைவு செய்கின்

த்திலும் யாழ்ப்பாணம் வலயத்

மூக சேவை நிறுவனங்களிலும்
தவிகளை வகித்திருக்கின்றார்.
வக் காலமும் அதிபர் சேவைக்
ாலும் அவருடன் இணைந்து
ும் இன்றும் பேசப்படுகின்றது.
ரில் பல முன்னேற்றகரமான

த பண்பாளர், அமைதியான
த் திறம்பட நடத்த வேண்டுமெ
இவரது ஓய்வுக்காலம் சிறப்பு

ளையும் சமூகப் பணிகளையும்
வந்த வாழ்த்துக்களும் பாராட்

ந்திரராஜா
ாளர்,
ி வலயம்.

### ் வாழ வாழ்த்துகின்றோம்

மது 60 ஆவது பிறந்தநாளைக்
ம் திருவாளர் தில்லைநாதன்
் அவர்கள் நலமுடனும் வளமு
வேண்டுமென்று உள்மாறப்
ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.
ர்வேலி சி.சி.த.க.பாடசாலை
ச்சியில் தம்மை முழுமையாக
து அரும்பணியாற்றியது குறிப்பி
ின் குடும்பத்துக்கு 10 இலட்சம்
த்தமையும் தரம் 5 மாணவர்
பெற்றமைக்கு காரணகர்த்தா

ன தரப் பரீட்சையில் மாணவர்
அளப்பரிய சேவை மகத்தானது.
த் தேவை என இறைவனை
ம்.
ரியாக வாழ்ந்து இன்னும் பல
று எல்லாம் வல்ல நல்லைக்
ற்கின்றேன்.
க!!"

கலாபூஷணம்
க எழுத்தாளரும் ஆதீன
கரும்.



## தில்லைநாதன் ரவீந்திரநாதன் (JP (Whole Island))

**(Sp.Tr.English,Dip in Accountancy,Dip in English (University of Jaffna) Dip.in.Education, P.G.Dip.in.Education management. (Faculty of Education Leadership Development & management, NIE, Neepe),MA (University of Jaffna))**

**பிறப்பு:- குப்பிழான் 1961.03.05**
**வசிப்பிடம்:- கலைமணி வீதி, கட்டப்பிராய், யாழ்ப்பாணம் (077 949 6985)**
**பெற்றோர்:- ஆறுமுகம் தில்லைநாதன் (மருத்துவ தொழில்நுட்ப வல்லுநர்) MLt அழகம்மா தில்லைநாதன் (ஆசிரியர்)**

### சமய, சமூக நிறுவன பதவிகள்

1986-குப்பிழான் சைவ மகாசபை - பிரச்சார முன்னாள் செயலாளர்
1987-குப்பிழான் பாவனையாளர் சங்க முன்னாள் செயலாளர்
1987-குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் பரிபாலன சபை உறுப்பினர்
2000-கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான முன்னாள் செயலாளர், தலைவர், போஷகர்
2010-கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையப்போஷகர்
2010-குப்பிழான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் முன்னாள் பா.அ.ச.பொருளாளர்
2012-சிங்கப்பூர் குப்பிழான் கிருஷ்ணன் நல்லுறவு மன்ற பொருளாளர்
2012-நல்லூர் றொட்டரிக் கழக உறுப்பினர்

### கடமை

| | |
|---|---|
| யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் | 28.03.1990 |
| யா/குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் | 25.06.1992 |
| யா/ஏழாலை மகா வித்தியாலயம் | 25.09.1992 |
| யா/இணுவில் இந்துக்கல்லூரி | 25.10.1992 |
| யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம் | 01.01.2001 |
| யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் | 12.09.2001 |
| யா/செங்குந்தா இந்துக்கல்லூரி | 02.01.2002 |
| யா/வண்ணை நாவலர் வித்தியாலயம் (2012 அதிபர் கடமை பொறுப்பு ஏற்றல்) | 14.06.2010 |
| யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை | 14.06.2014 |
| யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம் | 14.06.2019 முதல்-நேற்று வரை |

### பழைய மாணவன்


1.யா/குப்பிழான் விக்னேஸ்வரா வித்தியாலயம்
2.யா/தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி
3.யா/பரியோவான் கல்லூரி

### சேவைகள்

**நீர்வேலி சி.சி.த.க பாடசாலை**

- வறிய மாணவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்பு மாதாந்த கொடுப்பனவு.
- கொழும்பு பல்கலைக்கழக மாணவர் கழகத்தின் மூலம் புத்தகப்பைகள், சப்பாத்துக்கள் வழங்கப்பட்டன.
- வெளிநாட்டவர் நேரடி உதவி மூலம் மிக வறிய மாணவி குடும்பத்திற்கு ரூபா பத்து இலட்சத்துக்கு வீடு கட்டுவித்துக் கொடுக்கப்பட்டது.
- 2016 இல் தரம் 5 புலமைப்பரீட்சையில் 100% சித்தி
- குப்பிழான் சிங்கப்பூர் கிருஷ்ணன் நல்லுறவு மன்றத்தின் மூலம் வருடாந்தம் உணவுப் பொதி, புதுவருடத்திற்கு புத்தாடை வறிய குடும்பத்திற்கு பெற்றுக் கொடுத்தல்.
- கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மகோற்சவ கால சமய அறிவுப் போட்டியை ஆரம்பித்து பலகாலம் பரீட்சை செயலாளராக கடமையாற்றியமை.
- **நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.**
- சிறுவர் பூங்கா, திறன் வகுப்பறை, புதிய அலுவலகம், புதிய வகுப்பறைகள், மலசலகூட நடை பாதை, முன்பக்க மதிற்படம், சுற்று மதில் போன்ற பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டமை.
- 2020 இல் Rotary club உதவி மூலம் மாணவர்களுக்கு புத்தகப்பைகள், அப்பியாசக் கொப்பிகள் வழங்கல்.
- Rotary கழகத்தை ஸ்தாபித்தல்.
- திருமதி K.ரகுநாதன் (ISA) வழிகாட்டலில் மைக்கல் விளையாட்டுக்கழக உதவி மூலம் வறிய மாணவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்பு வழங்கல்.
- 2019 க.பொ.த (சா.த) பரீட்சையில் 100% சித்தி.
- Dr.கௌரி R.V.G நிறுவனம் மேக்கன்ரைல் நிறுவனம் றோட்டறிக் கழகம் 2019 தலைவர் செயலாளர் உதவி மூலம் போட்டோ கொப்பி இயந்திரம் என்பன பெற்றமை.
- ஆசிரியர், பழைய மாணவர் உதவி மூலம் திறன் வகுப்பறை, பிளாஸ்ரிக் கதிரைகள் பெற்றமை.

(C-1596)



### வாழ்த்துச்செய்தி

தனது 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் திரு.தில்லைநாதன் ரவீந்திரநாதன் அவர்களின் கல்விச் சேவையை பாராட்டுவதுடன் சேவைநயப்பு விழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1990 ஆம் ஆண்டு ஆசிரியராக யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக பணியேற்று தனது சிறப்பான பணியினாலும் அயராத உழைப்பினாலும் 2012 ஆம் ஆண்டு யா/வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் அதிபராக கடமையேற்று தனது பணியை சிறப்பாக ஆற்றியமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு உறுதுணையாக பாடசாலையின் உள்ளக வசதிகளை ஏற்படுத்தியும் பல சமூகம்சார் நிறுவனங்களிடமிருந்து பல உதவித் திட்டங்களைப் பெற்றுக்கொடுத்தும் மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் அவரது பதவிக்காலத்தில் கல்விச்சேவைக்கு மட்டுமன்றி சமூகம்சார் பணிகளிலும் ஈடுபட்டு சமூகப்பொறுப்புடன் தனது பணியை ஆற்றியுள்ளமை பாராட்டத்தக்கது. கல்வியறிவும் சுயமரியாதை எண்ணமும் பகுத்தறிவுத்தன்மையுமே மனிதனை உயர்த்தும் ஒரு வழி எனக்குறிப்பிடப்படுகின்றது. தனிமனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்குவாழ வழி வகுப்பதுமே கல்வி. மாணவர்களின் வாழ்விற்கு ஒளியூட்டி அவர்கள் நன்னடத்தையில் சிறந்து விளங்க பெரும்பொறுப்புடன் பணியாற்றியுள்ளமை பாராட்டுக் குரியது.

இவர் தனது பதவிக்காலத்தில் மேற்கொண்ட சேவையினை பாராட்டுவதுடன் தனது ஓய்வுக்காலத்தில் பல சமூக, சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**இ.இளங்கோவன், செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**



### மணிவிழாக் காணும் ஏழைகளின் தோழன் வாழிய வாழியவே

இன்றையதினம் மணிவிழாக்காணும் அதிபர் தி.ரவீந்திரநாதன் அவர்களை வாழ்த்துவதிலும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் பெருமிதம் அடைகின்றேன்.

அதிபர் அவர்கள் அடைந்துள்ள கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமை பெரிய கல்லூரிகளினை நிர்வகிக்கக்கூடியதாக அமைந்தபோதும் கல்விக்காக தவிக்கும் ஏழை மாணவர்களை வளர்த்தெடுப்பதற்காக சிறிய பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து அப் பாடசாலைகளை வளர்த்தெடுத்த பங்கு மறக்க முடியாதது, வாழ்த்துக்குரியது.

இவரது சேவையின் முதற்பணியாக அவரது தாய்மாமனும் சிங்கப்பூர் பிரதம தபாலதிபர் திருவாளர் கந்தையா கிருஷ்ணர் உதவி மூலம் சிங்கப்பூர் பணி அனுமதிப்பத்திரத்தின் மூலம் குப்பிழான் தனது உறவுகளையும் கிராமத்தவர்கள் ஆகியோரை சிங்கப்பூர் வேலைவாய்ப்பு பெற்று அனுப்பி வைத்தார். இன்று உலகத்தில் பல பாகங்களிலும் செல்வச்செழிப்புடனும் நிலச்சுவாந்தர்களாக வாழுகின்றமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அதிபர் அவர்கள் நிர்வகித்த சகல பாடசாலைகளினதும் பௌதீக வளங்களை கல்லூரிகளின் தரத்துக்கு வளர்ப்பதில் சிறப்பான பங்காற்றியமை மறக்கமுடியாது. யாழ்ப்பான கல்வி வலயம் அதிபர் அவர்களின் சேவையால் பெருமை பெற்றதென்றே கூறலாம்.

அதிபர் அவர்கள் ஓய்வுக்கு முன்னர் பணியாற்றிய நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம் இவரது காலத்தில் கண்டுகொண்ட வளர்ச்சி பாராட்டத்தக்கது. மணிவிழா நாயகனின் ஓய்வுக்காலம் சிறக்க இறைவனை வேண்டி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.மாணிக்கராசா**
**ஓய்வுநிலை பொதுநிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் கல்வி வலயம், மணிவிழாச் சபை தலைவர்.**

### நன்றி நவிலல்

**மேற்படி மலருக்கான உதவிகளை வழங்கிய அன்புள்ளங்களுக்கு மணிவிழாச்சபை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**
**திரு.தில்லையம்பலம் சசீதரன்,**
**மணிவிழா சபை, உபசெயலாளர்.**

**மலராக்கம்:- மணிவிழா சபை.**

## சமூக வலைத்தள மோசடிகளில் சிக்க வேண்டாம்- பொலிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து பரிசுப்பொதி அனுப்புவதாகக் கூறி அல்லது பணப்பரிசு கிடைத்துள்ளதாகக் கூறி சமூக வலைத்தளங்கள் ஊடாக பண மோசடிகள் இடம்பெறுவது அதிகரித்துள்ளது.

எனவே பேஸ்புக் உள்ளிட்டவற்றில் அறியாத நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி இவ்வாறான மோசடிகளுக்கு உள்ளாக வேண்டாம் என்று குற்றம் மற்றும் திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியங்க ஜயக்கொடி தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். (நி-4)

## ஜனாஸாக்களை எங்களின் பிரதேசங்களில் நல்லடக்கம் செய்ய முன்வாருங்கள்

### கல்முனை மாநகர முதல்வர்

(மட்டக்களப்பு)

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எமது மையவாடிகளிலேயே நல்லடக்கம் செய்வதற்கும் அதனால் பாதிப்புகள் ஏதும் ஏற்பட்டால் பொறுப்பேற்பதற்கும் தயாராக உள்ளதாக கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர கேட்போர் கூடத்தில் ஜனாஸா விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முஸ்லிம் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டு வந்தது.

ஆனாலும் இப்போது முஸ்லிம் ஜனாஸாக்கள் அடக்கம் செய்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அரசிடம் நாங்கள் முன்வைக்கும் ஒரே கோரிக்கை எங்களின் கொரோனா தொற்று ஜனாஸாக்களை இரணைமடு தீவில் அடக்கம் செய்யாமல் எங்களின் பிரதேசங்களில் நல்லடக்கம் செய்ய முன்வாருங்கள் என்பதே.

அதன் மூலம் ஏதாவது பக்கவிளைவுகள் வந்தால் அதை நாங்களே பொறுப்பெடுபோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# அதிகாலையில் இரணைதீவிற்கு கொரோனா சடலங்கள் செல்லும்

## வழிகாட்டல்கள் வெளியாகின

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களது சடலங்களை இரணைதீவில் புதைக்கும் அரசின் முடிவுக்கு அப்பகுதி மக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளில் இருந்து எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வரும் நிலையில் இரணைதீவில் கொரோனா சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பான விசேட வழிகாட்டல் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் வெளியாகியுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

* கொவிட்-19 மரணங்கள் தொடர்பில் அவர்களது உறவினர்களால் காலம் தாமதிக்காது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

*அதனை எழுத்துமூலம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறவினர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

* சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்படும் எழுத்து ஆவணங்கள், கொவிட்-19 தொற்றால் மரணிக்கும் சரீரங்களை இரணைத்தீவு நோக்கி கொண்டு செல்லும் வரை செல்லுப்படியாகும்.

* சரீரங்களைக் கொண்டு செல்வதற்கான சவப்பெட்டியை உறவினர்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

* சரீரங்களை எடுத்துச் செல்லும் போது படம் பிடிக்கவோ, ஒளிப்பதிவு செய்யவோ முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

*கொழும்பு நகரில் பெயரிடப்பட்டுள்ள இடத்திற்கு கொவிட்-19 தொற்றால் மரணிப்பவர்களின் சரீரங்கள் கொண்டு செல்லப்பட்டு நாளாந்தம் அதிகாலை 5.30 மணிக்கு நாச்சிக்குடா இறங்குதுறை வரை சரீரங்கள் கொண்டு செல்லப்படவுள்ளன.

* கொவிட்-19 தொற்றால் மரணிப்பவர்களின் சரீரத்தை அடையாளங்காண்பதற்காக வைத்தியசாலைக்கு பிரவேசிக்கும் உறவினர்களில் இரண்டு பேருக்கு மாத்திரமே இரணைதீவிற்கு செல்ல அனுமதி வழங்கப்படும்.

* குறித்த உறவினர்கள் தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு அமைய செயற்பட வேண்டும்.

*அத்துடன் சுகாதாரப் பணிக் குழாமினருடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

*எந்தவொரு காரணத்திற்காகவும் சரீரம் அடங்கிய சவப்பெட்டியை திறப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

இறுதிச் சடங்குகளை 2 உறவினர்களால் சுகாதார மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் பங்களிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)




**பவித்திரன்**

ஐந்து பெற்றால் அரசனும்
"ஆண்டி" ஆவான்




ஒரே குழப்பமாக இருக்கே...ஐந்து பெற்றால் அரசிதானே "Auntie" ஆவாள்

**ஞானியா**




**பிரதா**

போன வருசம் அடிச்ச வெயிலுக்கு மூஞ்சி ஆதார் கார்டுல உள்ள மாதிரி மாறிடிச்சு



ஆனா இந்த வருசம் அடிக்கிற வெயிலுக்கு மூஞ்சி ஆதார் கார்டு ஜெராக்ஸ் மாதிரி மாறிடும் போலையே

**தாட்சாயினி**

சிகரெட் பிடிக்கிறவங்க பலபேருக்கு முடி நரைக்கிறதே இல்லை. அப்படியா ஆச்சரியமா இருக்குதே எப்படி?



நரைக்கிற வயசு வரை அவர்களில நிறையப் பேரு இருக்கிறது இல்ல...

**பார்த்தீஸ்வரன்**

நீ Class ல எந்தப் பொண்ணையும் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டாயாமே...!



எப்படித் திரும்பிப் பார்க்கிறது... நான்தான் கடைசி பெஞ்ச் ஆச்சே...!

**கயல்**




ஞாபகம் வருதே ஞாபகம் வருதே

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் செவிப்புலன் பரிசோதனை

## மருத்துவர்கள் திட்டம்

(கொழும்பு)

**புதிதாக பிறக்கும் ஒவ்வொரு குழந்தைகளும், வைத்தியசாலையில் இருந்து வெளியேறுவதற்கு முன்னர் செவிப்புலன் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மருத்துவர்கள் திட்டமிட்டுள்ளனர்.**



கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர் சந்ரா ஜயசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பலருக்கு செவி புலன் பிரச்சினை காணப்படுகின்றது.

காதுகளில் படியும் கழிவுகளை வெளியேற்றுவதற்காக காது துடைப்பான், வாகன திறப்பான், சட்டைப் பின், போன்றவற்றை பயன் படுத்துகின்றனர்.

இதன் காரணமாக செவியினுள் காயங்கள் ஏற்படுவதுடன் நாளடைவில் செவிப்புலன் பிரச்சினை ஏற்படுவதாக மருத்துவ நிபுணர் சந்ரா ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்த அனுமதி

(கொழும்பு)




இலங்கையில் அவசர பாவனைக்காக ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி (Sputnik V) என்ற கொவிட் தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் நிபுணர்குழு அனுமதி வழங்கியுள்ளது. இராஜாங்க அமைச்சர் சன்ன ஜய சுமன இதனைத் தெரிவித்தார். (நி-4)

# தேங்காய் விற்கும் போர்வையில் போதைப்பொருள் விற்பனை


(கொழும்பு)

கிராண்ட்பாஸ் - நாகலகம் வீதியில் தேங்காய் விற்கும் போர்வையில், ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்போது, அவரிடமிருந்து ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர், தேங்காய் விற்பனையில் ஈடுபடும் போர்வையில், ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் கைதானவர், பிரான்ஸில் தங்கியுள்ள போதைப் பொருள் வர்த்தகர் ஒருவரின் உதவியாளர் எனவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். (நி-4)



இலங்கை விமானப் படையின் 70 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விமானப்படையின் சாகசக் கண்காட்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பு காலிமுகத் திடலில் ஆரம்பமானது.

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பரிவு

இன்றைக்கு உலகத்தில் இருக்கக்கூடிய பல வகையான துன்பங்களுக்கு அடிப்படையான காரணம் என்ன என்று தெரியுமா சேர்? கேட்டார் ஒருத்தர். என்ன என்று கேட்டான். ஒரு மனிதன் பேரில் இன்னொரு மனிதனுக்கு இருக்க வேண்டிய பரிவு இல்லாமல் போய்விட்டது சேர். அது தான் துன்பத்திற்குக் காரணம். பணத்தினாலே கிடைக்காத மகிழ்ச்சியும் ஊக்கமும் பரிவினாலே மக்களுக்குக் கிடைத்துவிடுகின்றது என்றார். அதற்கு டால்ஸ்டாய் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகச் சொன்னார்.

ஒரு சமயம் டால்ஸ்டாய் மொஸ்கோ நகரத்தின் 24 வது வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தாராம். அப்பொழுது ஒரு பிச்சைக்காரன் அவருக்கு எதிரில் வந்தான். ஐயா. பிச்சை போடுங்கள் என்றான்.

டால்ஸ்டாய் இளகிய மனதுடையவர். பரிவு நிறைந்த உள்ளம் அவருக்கு. உடனே அந்தப் பிச்சைக்காரனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று நினைத்தார். தன்னுடைய சட்டைப் பைக்குள்ளே கையை விட்டார்.அதிலே ஒரு காசு கூட இல்லை. உடனே அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து. தம்பி கையில் பணமில்லையே.அப்படி என்றார். இதைக் கேட்டதும் பசியாலே வாடிப் போயிருந்த அந்தப் பிச்சைக்காரன் முகத்தில் ஒரு மலர்ச்சி. ஐயா..நீங்கள் பிச்சை போடவில்லை என்றாலும் பரவாயில்லை இப்பொழுது என் மனது நிறைந்திருக்கு. மகிழ்ச்சியாக இருக்கு. அப்படி என்றான்.டால்ஸ்டாய் ஆச்சரியமாக அவன் முகத்தைப் பார்த்தார். அவன் சொன்னான்.

ஐயா நீங்கள் பிச்சை கொடுப்பதை விட ஒரு பெரிய உதவியை நீங்கள் இன்றைக்கு எனக்கு செய்துவிட்டீர்கள். அதாவது என்னை தம்பி என்று கூப்பிட்டீர்களே அது போதும் என்றான் அவன்.

தன்னைக் கொஞ்சமும் மதிக்காத இந்த உலகத்தில் தன்னையும் ஒரு மனிதனாக மதித்து தம்பி என்று உறவு கொண்டாடிய டால்ஸ்டாய் மேலே அந்தப் பிச்சைக்காரனுக்கு அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டது. கேவலம் பணத்தினால் கிட்டாத மகிழ்ச்சியும் ஊக்கமும் பரிவினால் மக்களுக்குக் கிடைத்துவிடும் என்பதற்கு இந்த சம்பவம் ஒரு நல்ல உதாரணம். இந்த பரிவு மனிதனிடம் இன்றைக்கு மிகவும் குறைந்து போய்விட்டது. அதனால் தான் துன்பப்படுகின் றான்.டால்ஸ்டாய்க்கு ஏற்பட்ட பரிவுணர்ச்சி நமக்கும் கைவர வேண்டும் என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்.

தினமும் கொஞ்ச நேரமாவது நம்மைப் பற்றிய சிந்தனையிலிருந்து விடுவித்துக் கொண்டு மற்றவர்களுடைய இதயத்தில் அமர்ந்து அவர்களுடைய கண்கள் வழியாக உலகத்தைப் பார்க்க முயற்சி செய்ய வேண்டும். பல பேரை அப்படிப் பார்த்திருக்கின்றீர்கள்.

ஆல்பர்ட் ஷ்வைட்ஸர் அமெரிக்காவுக்குப் போயிருந்தார். அப்பொழுது அவரிடம் படித்த மாணவர் ஒருத்தர் அவரைச் சந்தித்தார். என் கூடக் கொஞ்சம் ஹோட்டலுக்கு வரவேண்டும் என்று பணிவாக கூப்பிட்டார். இவரும் சரி என்று சொல்லிவிட்டு அவருடன் போனார். அங்கே அழைத்துக் கொண்டு போய் இவரை உட்கார வைத்தார். அங்கே ஷ்வைட்ஜருக்காக ஒரு ஸ்பெஷல் கேக் வரவழைக்கப்பட்டிருந்தது. கேக்கை வெட்டுவதற்கு முன்னர் ஷ்வைட்ஸர் அங்கே அந்த அறையில் உள்ளவர்கள் எவ்வளவு பேர் என்று எண்ணிப் பார்த்தார். 9 பேர் இருந்தார்கள். உடனே இவர் 10 துண்டு வெட்டினார்.

9 பேர் தானே இருக்கின்றோம் பத்து துண்டு எதற்காக? என்று எல்லோரும் யோசித்தார்கள். அப்பொழுது ஆல்பர்ட் வைட்ஸர் சொன்னார்.

மிகவும் பிரியமாக இந்தக் கேக்கை இங்கே கொண்டுவந்து வைத்த பணிப் பெண்ணுக்கு இந்த பத்தாவது துண்டு என்றார்.இது தான் பரிவு. மனிதன் மனிதனுக்குக் காட்ட வேண்டிய பரிவு.இப்பொழுதெல்லாம் ஒரு மனிதன் இன்னொரு மனிதனை எப்படி எடை போடுகின்றான் தெரியுமா?

ஒரு புகையிரத நிலையம். ஒரு ஆள் வந்தான். அங்கே நின்று கொண்டிருந்த ஒருத்தரைப் பார்த்து சேர் உங்களுக்கு மதுப் பழக்கம் உண்டா? என்று கேட்டான்.

சுத்தமாக கிடையாது சேர் என்றார்.

சரி அப்படி என்றால் இந்த மதுப்போத்தலை கொஞ்ச நேரம் வைத்துக் கொள்ளுங்கள். நான் போய் டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்துவிடுகின்றேன் என்று அதைக் கொடுத்துவிட்டு மிகவும் நம்பிக்கையோடு நடந்து போகின்றான்.




## ஆக்ரா நகரில் இரண்டே திருப்பங்கள் தானா?



அக்பரின் அரசாட்சியும், அவருடைய அவையோரின் புத்திக்கூர்மையும் பிரசித்து பெற்றது. அது பாரசீக நாடு வரை பரவியது. பார்சி மன்னன் அதைச் சோதித்து பார்க்க தன் மந்திரி ஒருவரை அக்பரின் அவைக்கு அனுப்பினான்.

பாரசீக மந்திரி அக்பரை வணங்கி, தான் வந்த விடயத்தை கூறினான். அக்பரும் அதற்கு ஒப்புக் கொண்டார். பாரசீக மந்திரி அவையோரைப் பார்த்து, "உங்கள் ஆக்ரா நகரில் உள்ள வீதிகளில் எத்தனை திருப்பங்கள் உள்ளன?" என்று கேட்டான்.

அவையோர் வியந்தனர். அக்பருக்கும் ஆச்சர்யமாகி விட்டது. இது என்ன கேள்வி? இதற்கு எப்படி விடை அளிக்க முடியும்? ஆக்ரா நகர் மிகப் பெரிய ஊர். பல வீதிகளைக் கொண்டது. அதில் எத்தனையோ திருப்பங்கள். இதை எல்லாம் யார் கணக்கிட இயலும்?

பாரசீக மந்திரி மறுநாள் காலை தான் வருவதாகவும் அப்போது விடை கூறினால் போதும் என்றும் சொல்லி விட்டு சென்று விட்டார். அக்பர் பீர்பாலைத் தேடினார். பீர்பால் அடுத்த ஊருக்குச் சென்றிருப்பதாகவும் மாலை வந்து விடுவார் என்றும் மந்திரிகள் கூறினர்.

அதற்குள் அக்பர் சிப்பாய்களை அழைத்து ஆக்ரா நகரின் அனைத்து வீதிகளையும் அதன் திருப்பங்களையும் கணக்கெடுக்கும் படி ஏவினார். மந்திரிகளும் அதே வேலையில் முழுகினார். மாலை பீர்பால் திரும்பி வந்தார். மன்னர் மூலம் செய்தி அறிந்தார்.

"மன்னா! கவலையை விடுவீர்களாக. நாளை காலை நான் அந்த பாரசீக மந்திரிக்கு பதிலளிக்கிறேன். நீங்கள் முதலில் ஆக்ரா வீதிகளுக்கு அனுப்பிய சிப்பாய்களை திரும்ப அழையுங்கள் பாவம். " என்றார்.


மன்னர் அவ்வாறே செய்தார். ஆனால் மனதிற்குள் அவருக்கும் கலக்கம். இதை எப்படி பீர்பால் சமாளிக்கப் போகிறார் என்று கவலைப்பட்டார். மறுநாள் பாரசீக மந்திரி கம்பீரமாக வந்தார். பீர்பாலும் சளைக்காமல் அவரை எதிர் கொண்டார்.

" மன்னா! என் கேள்விக்கு விடை தயாராக இருக்கிறதா? உங்கள் ஆக்ரா வீதிகளில் எத்தனை திருப்பங்கள் உள்ளன?" என்று கேட்டார் பாரசீகர். மன்னர் பீர்பாலின் பக்கம் திரும்பினார். பீர்பால் கூறினார், " இரண்டே இரண்டு திருப்பங்கள் தான்" "என்ன? இத்தனை பெரிய ஆக்ரா நகரில் இரண்டே இரண்டு திருப்பங்கள் தானா?" ஒரே சமயத்தில் அனைவரும் கேட்டனர்."

ஆமாம். இடது, வலது. இரண்டே திருப்பங்கள்" என்று பதிலளித்து அரசரின் பெயரைக் காப்பாற்றினார் அறிவுள்ள பீர்பால்.

# மகாபாரதம்

**வேதவியாசன்**




அம்பை வெளியேறிய பின் பீஷ்மர் விசித்திர வீரியனுக்கு அம் பிகை, அம்பாலிகையை மணம் செய்வித்தார்.

இவர்களுடன் ஏழு ஆண்டுகள் வாழ்ந்த விசித்திரவீரியன் காச நோயால் இறந்தான்.

நாட்கள் சில சென்றதும் சத்யவதி பீஷ்மரிடம் "மகனே! உன் தம்பி மக்கள் பேறின்றி இறந்தான்.

சந்தனுவின் குலம் தழைக்க வேண்டும். தரு மசாத்திரம் தெரிந்தவன் நீ புத்திரர் இல்லா குலம் எப்படி தழைக்கும். ஆகவேநீஅம்பிகை, அம்பாலிகையுடன்கூடிப் புத்திர சந்ததியை உண்டாக்கு" என்றாள்.

ஆனால் பீஷ்மரோ "அன்னையே! நீங்கள் உரைத்தது மேலான தர்மமே...ஆனாலும் என் சபதத்தை நான் மீற மாட்டேன்" என உறுதியாக உரைத்தார்.

அதற்கு சத்யவதி "ஆபத்துக் காலங்களில் சாத்திரம் பார்க்க வேண்டியதில்லை. நெருக்கடியான நேரங்களில் தர்மத்தில் இருந்து விலகுதல் பாவம் இல்லை. ஆகவே நான் சொல்வது போல செய்" என்றாள்.

ஆனால் பீஷ்மரோ "அன்னையே நம் குலம் தழைக்க வேறு ஏதேனும் யோசியுங்கள் என்றார்.

பின் சத்யவதி பீஷ்மரிடம் தன் கதையைக் கூற லானாள். "கங்கை மைந்தனே! இன்று ஒரு உண்மையை உன்னிடம் தெரிவிக்கிறேன். அது இரகசியமாகவே இருக்கட்டும்.

முன்பு வசு என்ற மன்னனின் வீரியத்தை ஒரு மீன் தன் வயிற்றில் கர்ப்பமாக தாங்கியிருந்தது. அந்த மீன் வயிற்றில் வளர்ந்தவள் நான் தான்.

ஒருநாள் ஒரு செம்படவன் அம்மீனை தன் வீட்டிற்கு கொண்டு போனான். அங்கு நான் பிறந்தேன். அவர் பின் என்னை தன் மகளாய் வளர்த்தார்.

நானும் வளர்ந்து கன்னிப்பருவம் எய்தினேன். யமுனை ஆற்றில் பரிசல் ஓட்ட ஆரம்பித்தேன்.

அப்போது ஒரு நாள் பராசர முனிவர் என் படகில் ஏறினார். என்னைப் பார்த்து காம வயப்பட்டார். ஆனால் நானோ பயந்தேன்.

அப்போது அவர் "நான் செம்படவப் பெண் இல்லை என்று உணர்த்தினார். உடன் நான் இந்த பகல் நேரத்திலா என்றேன். அவர் உடனே சூரியனை மறைத்து இருளாக்கினார்.

என் உடலில் மீன் நாற்றம் வீசுகிறதே. என்றேன். உடன் என் உடலில் நறுமணம் வீச வைத்தார். இந்த நதிக் கரையிலேயே நீ கர்ப்பம் அடைந்து குழந்தை பிறந்து மீண்டும் கன்னியாகி விடுவாய் என்றார். பின் அவர் என்னைச் சேர்ந்து ஒரு மகனை உண்டாக்கி விட்டார்.

எனக்குப் பிறந்த அந்த மகன். "த்வைபாயனன்" என்றழைக்கப்பட்டான். அவன் யோக சக்தியால் மகரிஷி ஆனான். வேதங்களை நான்காக வகுத்தான். அதனால் வேதவியாசன் என்ற பெயர் பெற்றான்.

நீ சம்மதித்தால் நான் அவனுக்கு கட்டளை இடுகிறேன் உடன் அந்த மகரிஷி இங்கு தோன்றி அம்பிகை, அம்பாலிகைக்கு புத்திர பாக்கியம் அளிப்பான்" என்றாள். (தொடரும்)

# இலங்கையில் வேகமாகப் பரவிவரும் நோய்

(கொழும்பு)

**டைனியா தொற்று காரணமாக ஏற்படும் தோல் நோய் அநுராதபுர பகுதியில் வேகமாக பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.**




பாதிக்கப்பட்டவர்களின் தோலில் சிவப்பு புள்ளிகள் தோன்றும் என்று அநுராதபுர போதனா வைத்தியசாலையின் டாக்டர் ஹேமா வீரகோன் தெரிவித்தார்.

இதற்கு மருத்துவரிடம் சென்று முறையான சிகிச்சையைப் பெறுவதன் மூலம் நோயைக் குணப்படுத்த முடியும் என்றும் டாக்டர் கூறினார்.

சாதாரணமாக விட்டால் உடல் முழுதும் பரவுவதுடன், ஏனையோருக்கும் தொற்றும் ஆபத்து உள்ளது. டைனியா (அல்லது கருப்பு குழாய்) தொற்று என்பது வெவ்வேறு பூஞ்சைகளால் ஏற்படும் ஒரு நோயாகும். பூஞ்சை உடலின் வெவ்வேறு பகுதிகளை பாதிக்கின்ற தோல் நோயாகும். (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன் - எதற்கு - எப்படி



## திருமண யோகம் தரும் தெய்வத் திருமணங்கள்!

(தொடர்ச்சி)

தனி நபர்களும் வேண்டுதலின்பேரில் பக்தர்களுக்கு மாங்கல்யப் பிரசாதம் கொடுப்பார்கள். இறைவன் இறைவிக்கு நடைபெறும் திருக்கல்யாணத்தை நேரில் பார்த்து தரிசனம் செய்பவர்களுக்குக் கல்யாண யோகம் உண்டாகும்.

மதுரையைப் போலவே காஞ்சிபுரத்தில் காமாட்சி - ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தில் நடக்கும் திருக்கல்யாண விழா நடைபெறும்போது அதே மண்டபத்தில் ஏராளமான பக்தர்கள் திருமணம் செய்து கொள்வார்கள். இறைவனும் இறைவியும் மாலை மாற்றிக் கொள்ளும் போது இவர்களும் மாலை மாற்றிக் கொள்வார்கள்.

திருமாங்கல்யம் கட்டப்பட்ட பிறகு இறைவன் இறைவி சார்பான மணக்கோலத்தில் உள்ள சிவாச்சாரியார்கள் அக்னி வலம் வருதல், பொரி தூவுதல், அம்மி மிதித்தல் போன்ற சடங்குகளை நடத்திக் காட்டுவார்கள்.

வைணவத் தலங்களான திருப்பதி, ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் ஆகிய ஊர்களிலும் இறைவன் இறைவிக்குப் பதிலாக அர்ச்சகர்களே மணமக்கள் வேடம் அணிந்து மாலை மாற்றிக் கொள்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

சென்னை திருவல்லிக்கேணி பார்த்த சாரதி கோவிலில் பரிவாரத் தெய்வங்களாக வரதராஜப் பெருமாள், நரசிங்கப் பெருமாள் இருப்பதால் இத்தலத்தில் ஆண்டுக்கு மூன்று தடவை திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெறுகிறது. மார்கழி மாதம் பார்த்தசாரதி - ஆண்டாள் திருமணம், மாசி மாதம் ரங்கநாதர் - வேதவல்லி தாயார் திருமணம் மற்றும் பங்குனி உத்திர நாளில் நடக்கும் திருமணம் என 3 தடவை திருக்கல்யாணம் நடத்தப்படுகிறது.

தமிழ்நாடு முழுவதும் பெரும்பாலான ஆலயங்களில் பங்குனி உத்தரம் தினத்தன்று தான் திருக்கல்யாண விழாக்கள் நடத்தப்படுகிறது. அன்று பக்தர்கள் விரதம் இருப்பது காலம் காலமாக நடந்து வருகிறது. இந்த விரதத்துக்குத் திருமண விரதம் என்று பெயர்.

வீட்டில் மங்கலகாரியம் நடப்பதற்கு துணை புரிவதால் எல்லாத் தலங்களிலும் திருக்கல்யாண விழாக்கள் ஆண்டு தோறும் தவறாமல் நடத்தப்படுகிறது.

எந்த ஊரில் உள்ள ஆலயத்தில் இறைவனுக்கும் இறைவிக்கும் மிகச் சிறப்பாகத் திருக்கல்யாணம் நடத்தப்படுகிறதோ அந்த ஊரில் உள்ள பெண்கள் திருமண யோகத்தை உரிய காலத்தில் பெறுவார்கள் என்பது ஐதீகம்.

ஆனால் பெரும்பாலான பக்தர்கள் இந்த ஐதீகத்தைப் புரிந்து கொள்ளாமல் ஆலயங்களில் நடத்தப்படும் திருக்கல்யாண விழாக்களில் கலந்து கொள்ளாமல் உள்ளனர்.

எனவே இனியாவது ஆலய திருக்கல்யாணங்களில் உள்ள இரகசியத்தைப் புரிந்து கொண்டு அதில் பங்கேற்று இறை வழிபாடு செய்ய வேண்டும்.

தமிழகத் தில் உள்ள சில தலங்கள், இறைவன் இறைவி திருக்கல் யாணத்துக்கு மிகவும் சிறப்புப் பெற்றவை. இல்வாழ்க்கைக்கு அதிக பலன்களை அள்ளித்தரும் ஆற்றல் பெற்றவை. அவற்றைத் தெரிந்து கொண்டு வழிபட்டால் உரிய பலனைப் பெற முடியம்.


உலகமும் உயிர்களும் தொடர்ந்து இயங்கி இறைவன் நமக்கு ஆற்றும் பேரருளை நினைவுபடுத்தும் விதமாகத் திருக்கல்யாணங்கள் நடத்தப்படுகிறது என்ற உண்மையை நமது வாரிசுகளுக்கு நாம் அவர்களை ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லும் போது எடுத்துச் சொல்ல வேண்டும்.

திருக்கல்யாண நிகழ்ச்சிகளை வெறும் சடங்காகக் கருதாமல் அதில் உள்ள தாத்பர்யங்களை அனைவரும் அறிந்து கொள்ள செய்தால்தான் திருக்கல்யாண நிகழ்வுகள் மூலம் வெற்றியும் பலனும் கிடைக்கும்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## புதிய அரசியல் கட்சிகளை பட்டியலிட நடவடிக்கை




(கொழும்பு)

நாட்டில் புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்காக இதுவரை 35 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விண்ணப்பங்கள் விரைவில் பட்டியலிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல். புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். அதன்பின்னர், விண்ணப்பதாரர்களுக்கான நேர்காணல்கள் முன்னெடுக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட கட்சிகளை பதிவு செய்வதற்கு அனுமதி வழங்கப்படுவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான கால அவகாசம் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## இலஞ்சம் பெற்ற 14 பேர் கைது

(கொழும்பு)

இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஆணைக்குழுவின் விசாரணை பிரிவு தெரிவித்துள்ளது. சுற்றிவளைப்புக்களில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த பிரிவு தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், கடந்த வருடம் குறித்த காலப்பகுதியில் கைது செய்யப்பட்டவர்களை விட இவ்வருடம் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலஞ்சம் மற்றும் ஊழல் அற்ற நாடொன்றை உருவாக்குவதற்காக தொடர்ந்தும் இவ்வாறான சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படும் என இலஞ்ச ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 250 | 160 | 200 |
| தக்காளி | 250 | 240 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 70 | 40 |
| கோவா | 160 | 180 | 150 | 200 |
| கரட் | 150 | 200 | 220 | 240 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 160 | 120 | 150 | 120 |
| வாழைக்காய் | 50 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 200-300 | 240 |
| பெரிய வெங்காயம் | 180 | 120 | 120 | 180 |
| பாகற்காய் | 180 | 200 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 200 | 180 | 180 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 140 | 180 | 140 | 200 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 | 150 |
| பீற்றூட் | 100 | 120 | 100. | 100 |
| கறிமிளகாய் | 200 | 250 | 200 | 200 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 120 | 120 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 70 | — | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 160 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 60-80 | 80-100 |
| இராசவள்ளி | 250 | 200 | 180 | 180 |
| வெங்காயப்பூ | 120 | 180 | 120 | 150 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | * 40 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 130 | 100 | — | 80 |



வட்மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழுகுக்கலை, மனைப்பொருளியல் கண்காட்சி கடந்த 23 ஆம் திகதி நெடுந்தீவிலுள்ள தேவானந்தா கலாசார மண்டபத்தில் நெடுந்தீவு பிரதேச செயலர் எப்.சீ. சத்தியசோதி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் திருமதி. ந.இன்பராஜும் கலந்து கொண்டனர்.

# நடத்துநர், சாரதி மீது தாக்குதல் நடத்தியவர்கள் கைது

(நெளுக்குளம்)

வவுனியா நகர் பகுதியில் தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் மீது கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் நடத்துநர் மற்றும் சாரதி காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் நபர் ஒருவர் தொலைபேசியினை வவுனியாவில் உள்ள தனது நண்பரிடம் கொடுக்குமாறு நடத்துநரிடம் வழங்கிச்சென்றுள்ளார்.

வவுனியாவில் குறித்த நடத்துநர் உரிய நபரிடம் தொலைபேசியினை வழங்கிய பின்னர் ஒரு பெண் நடத்துநரிடம் தொலை பேசியினை கேட்ட போது தொலைபேசியினை அவர் கொடுத்து விட்டதாகக் கூறியுள் ளார். அதன்போது அப்பெண்ணு டன் முச்சக்கர வண்டியில் வந்த சில நபர்கள் சாரதி மற்றும் நடத்துநரை தாக்கிவிட்டு சென்றுள்ளனர். காயமடைந்த நடத்துநர், சாரதி வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டினையடுத்து தாக்குதல் நடத்திய நபர்கள் தொடர்பில் சி.சி.ரிவியின் உதவியுடன் வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் ஒருவரை கைது செய்ததுடன் அவரது முச்சக்கர வண்டியையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)

# சான்றோர் மதிப்பளிப்பும் நூல் வெளியீடும்

(குப்பிழான்)

யாழ்.இலக்கியக் குவியம் நடத்தும் சான்றோர் மதிப்பளிப்பும் நூல் வெளியீடும் நாளை மறுதினம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி எனும் முகவரியில் அமைந்துள்ள International French Language Centre மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.இலக்கியக் குவியத் தலைவர் மருத்துவர் க.சோதிதாசன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் மாத கலைச் சேர்ந்த காசி.ஜீவலிங்கம் எழுதிய யாழ்ப்பாவணன் கவிதைகள் எனும் நூல் வெளியீடு செய்து வைக் கப்படவுள்ளது. மேற்படி நிகழ் வில் மூத்த எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன் பிரதம விருந் தினராக கலந்து கொள்வார். (5-4-18)

# கைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை நாகேந்திரம் பகுதியில் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் கைத்தொழில் பேட்டை ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தொழில்நுட்ப கல்வி நிறுவனம் பெண்களுக்கான பொருளாதாரத்தை வலுவூட்டும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாகேந்திரம் கிராமத்தில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளை ஊக்குவித்தல் என்ற திட்டத்தின் கீழ் 20 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு மேற்படி கைத்தொழில் பேட்டை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தக் கூடிய வகையிலும் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலும் குறித்த திட்டமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் கைத்தொழில் பேட்டையை திறந்து வைத்தார்.

இதில் கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன், கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி நிர்வாகத்தினர் மற்றும் போரூட் நிர்வாகத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர். (5-4-299)

# நாளை இரத்ததான முகாம்

(குப்பிழான்)

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத் தொண்டர் சபையும் பரிபாலன சபையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்த தான முகாம் நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் வட்டுக் கோட்டை-மூளாய் வீதியில் அமைந்துள்ள கணேச வாசி கசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு உன்னதமான இரத்ததானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஆராய்வு

(மன்னார்)

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேலின் நெறிப்படுத்துதலில் இடம்பெற்ற குறித்த ஒருங்கிணைப்புக்கு கூட்டத்தில் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கே.திலீபன், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், வட மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், பிரதேச செயலாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், பொலிஸ், இராணுவம், கடற்படை உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குறிப்பாக குடிநீர்,விவசாயம், கடற்றொழில், கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. (5-4-285)

# நெல்லினை பகிர்ந்தளித்த விவசாயி



(தருமபுரம்)

கண்டாவளை கமநலசேவை நிலையத்தின் கீழ் விவசாயம் செய்துவரும் விவ சாயி ஒருவர் கடந்த பல வருடகாலமாக தான் விவ சாயம் செய்யும் நெல்லினை ஏழை மக்களுக்கு பகிர்ந்த ளித்து அதில் ஒரு பகுதியினை தனது தேவைக்கும் பயன்ப டுத்துவது வழக்கம். அந்த வகையில் இம்முறை அறுவடை செய்த நெல்லினை குடும்பத்திற்கு தல ஒரு மூட்டை விகிதம் வரும் அனைவருக்கும் நேற்று பகிர்ந் தளித்தார். அவர் தனது பெயரின் முகவரியைக் குறிப்பிட விரும்ப வில்லை. (5-4-316)



வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்தி திணைக்களம் மற்றும் கோப்பாய் பிரதேச செயலகத்தின் அனுசரணையில் மகளிர் அபிவிருத்தி நிலையக் கண்காட்சி நேற்று முன்தினம் புதன் கிழமை கோப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி.சுபாஜினி மதியழகன் தலைமையில் இடம்பெற்றது. (படம்:-ரவிசாந்)

வாழ்க்கை என்பது என்ன? அது ஆழ்கடல். அதிலே ஆன்மா,பாய்இழந்த மரக்கலம் போல வாழ்வின் இன்பம்,துன்பம் எனும் அலைகளால் அலை கழிக்கப்படுகிறது. - எல்.இ.லாண்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கும் அவலச் சம்பவங்கள் காரணத்தைக் கண்டறிவரோ!

ஊடகங்களில் நாளாந்தம் வெளிவருகின்ற செய்திகளைப் பார்க்கும்போது இதயம் கருகிப் போகிறது.

அந்தளவுக்கு இயத்தை எரிக்கவல்ல கொடும் செயல்கள் சர்வசாதாரணமாக நடந்தேறுகின்றன.

மூன்று பிள்ளைகளைக் கிணற்றுக்குள் வீசிக் கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்ய முயன்ற தாய்.

எட்டு மாதக் குழந்தையைக் கதறக் கதற அடித்துத் துன்புறுத்திய பெற்றவள்.

இளம் பெண்ணின் தலையை வெட்டி கொய்துவிட்டு, தூக்கில் தொங்கி உயிர் மாய்த்த சப்இன்ஸ்பெக்டர்.

தன் குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்திய வரை காரால் மோதி பின் குத்திக் கொன்ற கொடூரம்.

உறவுக்கார இளைஞன் கூரிய ஆயுதத்தால் குத்தியதில் பலியான சிறுவன்.

என்பதான அவலச் செய்திகள் நீண்டு செல்கின்றன.

அடிப்படை வசதிகள், தகவல் தொடர்பாடல் வசதிகள், அரச உதவித் திட்டங்கள், கல்வி மற்றும் சுகாதார மருத்துவ வசதிகள்.

சிறுவர் காப்பகங்கள், முதியோர் இல்லங்கள், ஆற்றுப்படுத்தும் நிலையங்கள், வெளிக்கள உத்தியோகத்தர்களின் சேவைகள், சிறுவர் உரிமைச் சட்டங்கள் என ஏகப்பட்ட சமூக நலத் திட்டங்கள் அமுலில் இருக்கின்ற வேளையில்,

தற்கொலைகளும் கொலைகளும் விபத்துக்களும் கண்டபாட்டில் அதிகரித்துள்ளன எனில், இதற்கான காரணம் என்ன என்று கண்டறிவது யார் பொறுப்பு? என்பதுதான் நம் முன்னெழுந்துள்ள கேள்வி.

பொதுவில் தற்கொலை மரணங்கள் நம் வட புலத்தில் சர்வசாதாரணமாக நடந்தாகின்றன.

அதிலும் இளம் வயதினர், இளம் குடும்பஸ்தர்கள் விரக்தியின் எல்லைக்குச் சென்று உயிரை மாய்த்து விடுகின்ற முடிவுக்கு வருகின்றனர் எனில், இதற்கான் பரிகாரங்கள் என்ன என்று சிந்திக்கப்படுகின்றதா? என்பதுதான் புரியாமல் உள்ளது.

சில காலங்களுக்கு முன்னர் கடன் தொல்லைகளும் மீற்றர் வட்டிக் கடன்களும் நுண் கடன்களை வசூலிப்பவர்கள் கொடுத்த பாலியல் ரீதியான தொல்லைகளும் தற்கொலைகளைத் தூண்டியிருந்தன.

இப்போது அந்தத் தொல்லைகள் குறைவடைந்துள்ளனவாயினும் தற்கொலை மரணங்கள் குறைந்தபாடில்லை.

இதற்கு மேலாக இப்போது கொலைச் சம்பவங்களும் தலைவிரித்தாடுகின்றன.

நிலைமை இவ்வாறாக இருக்கையில்; இச்சம்பவங்கள் வெறும் செய்திகளாக வெளிவந்து, பொதுமக்களின் மனங்களை வருத்தி பின்னர் அதுவே மன வக்கிரத்தை ஏற்படுத்திவிட, தற்கொலைகளும் கொலைகளும் சர்வசாதாரணமாகிவிடும்.

ஆகையால் இதுபற்றிய ஆய்வுகளும் ஆக வேண்டிய காரியங்களும் நடைமுறைக்கு வருவதை சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புடன் செய்தாக வேண்டும்.

# சிவராத்திரியை முன்னிட்டு சிவவாரம் இன்று ஆரம்பம்

(குப்பிழான்)

மகா சிவ ராத்திரியை முன்னிட்டு அகில இலங்கை சைவமகா சபை வருடா வருடம் கடைப்பிடிக்கும் சிவ வாரம் இன்று வெள்ளிகிழமை (05) தொடக்கம் எதிர்வரும்-11 ஆம் திகதி வியாழக்கிழமை வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

தொண்டுப் பணிகளுக்கு சிவ தொண்டரகளை, சிவ மங்கையர்களை இணைத்துக் கொள்ளும் வேலைத்திட்டம் முக்கியமாக இக்கால கட்டத்தில் முன்னெடுக்கப் படவுள்ளது. அத் துடன் இரத்த தான முகாம்களை ஏற்பாடு செய்தல், நலிவுற்ற குடும்பங்களை ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகள் , சைவ அறப்பணி நிதியத்தை வலுப்படுத்தல், சிவ தீட்சை, சிவலிங்கம் வழங்கல், அறநெறிப் பாடசாலைகளுக்கு உந்து சக்தி அளித்தல் செயற்பாடுகளும் சைவ மகா சபையால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இப்பணிகளுடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கு இச் சிவ வார காலத்தில் சிவ தொண்டர்களாக , சிவ மங்கையர்களாக உங்களை இணைத்துக்கொள்ளுமாறு சைவ மகாசபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

6 இற்கும் 10 வயதுக்கும் இடைப்பட்டோர் மழலைச் சிவ தொண்டர்களாகவும், 10 இற்கும் 18 வயதுக்கும் இடைப்பட் டோர் இளம் சிவ தொண்டர் களாகவும்,18 வயதுக்கு மேற்பட்டோர் சிவ தொண்டர் களாகவோ, சிவமங்கையர்களாகவோ இணைய முடியும்.

புதிய சிவதொண்டர் அல்லது சிவ மங்கையர் உங்கள் ஊர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று உறுதிப்பிரமணம் ஏற்று சிவ லிங்க தாரிகளாக தம்மை சிவ, மக்கள் தொண்டுகளிற்கு இறை சிவனின் அருளாசியுடன் அர்ப்பணிக்க முடியும்.

எனவே,தங்களையோ, பிள்ளைகளையோ இணைக்க விரும்பும் அன்பர்கள் 0702373901 எனும் தொலைபேசி இலக்கதுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3-18)

# செல்வாக்கை பயன்படுத்தி ஜெயசூரியவுக்கு கொரோனா தடுப்பூசி

## சுகாதார அமைச்சின் செயலாளருக்கு இடமாற்றம்?

(கொழும்பு)

முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணி தலைவர் சனத் ஜெயசூரிய செல் வாக்கின் அடிப்படையில் கொரோனா தடுப்பூசி பெற்ற குற்றச்சாட் டையடுத்து, ஆரம்ப சுகாதார, தொற்று நோய்கள் மற்றும் கோவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா வேறு அமைச் சுக்கு மாற்றப் பட்டுள ளதாக கூறப்படுகிறது.

சனத் ஜெயசூரியவுக்கு தடுப்பூசி செலுத்தியதில் அவர் தலையிட்டதாகக் கூறப்படுவதால் இந்த இடமாற்றம் செய்யப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்ப டுகிறது.

ஆரம்ப சுகாதார, தொற்றுநோய் மற்றும் கோவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே இடமாற்றம் குறித்த செய்தி களைக் கேட்டதாகக் கூறினார். எவ்வாறாயினும், இந்த முடிவு இன்னும் அதிகார பூர்வமாக அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும இதனால் இடமாற்றம் செய்யப் படுவதாகக் கூறப் படுவது குறித்து அவரு க்குத் தெரியாது என் றும் கூறியுள்ளார்.

முன்னதாக, இலங்கை முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரியவுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்ட முடிவை பரிசீலித்து வருவதாக இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (ம-3)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

நாம் பிறவாத இடமோ, பேசாத மொழியோ, நாம் தோன்றாத குலமோ கிடையாது. எண்ணி கோடி பிறவிகளை எடுத்துள்ளோம். ஆதலால் நம் நாடு, எல்லோரும் நம் சகோதரர்கள் என்று கருதி சாந்தமாகவும் அன்பாகவும் வாழ வேண்டும்.

மரணம் எப்போதும் வரும். எந்த இடத்தில் வரும் என எவராலும் அறிந்துகொள்ள இயலாது. அது எந்த விநாடியிலும் வரும். ஆதலால் நல்ல அறங்களைச் செய்து தவம், தியானம் புரிந்து செல்கதிக்கு நலம் தேட வேண்டும். (தொடரும்)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஆன்மீகமும் கொண்டாட்டமும்

கொண்டாட்டம் ஆன்மாவின் இயல்பு.

எந்தக் கொண்டாட்டமும் ஆன்மிகச் சார்புடையதாகவே இருக்கவேண்டும்.

ஆன்மிகமில்லாக் கொண்டாட்டத்தில் ஆழம் இல்லை.

மௌனம் கொண்டாட்டத்திற்கு ஆழத்தைத் தருகிறது.

மௌனமாக இருத்தல் தான் ஆன்மிகம் என்று சிலர் எண்ணுகின்றனர். உதாரணமாக சிரித்தல், பாடுதல். நடனமாடுதல் ஆகியவை ஆன்மிகமில்லாதவை என்று தியானம் செய்யும் பலர் கருதுகின்றனர்.

கொண்டாட்டம் மட்டுமே ஆன்மிகம் என்று சிலர் எண்ணுகின்றனர். உதாரணமாக இந்தியக் கிராமங்கள் மற்றும் ஆபிரிக்கா போன்ற இடங்களில் கொண்டாட்டம் என்றாலே உரத்த இசை என்று பொருள். அங்கு மௌனத்திற்கு இடமே இல்லை.

ஆன்மிகம் என்பது வெளிப்புற மௌனமும் உட்புறக் கொண்டாட்டமும் இணக்கமாகச் சேர்ந்த நயனமான கலவை ஆகும். உட்புற மௌனமும் வெளிப்புறக் கொண்டாட்டமும் கூட.

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வெற்றிலை தீபம் ஏற்றி வழிபடுவதால் ஏற்படும் நன்மைகள் என்ன?


6 வெற்றிலைகளையும் மயில் தோகை போல் விரித்து, வைத்து விடவேண்டும். அதன்மேல் ஒரு அகல் விளக்கை வைத்து, நல்லெண்ணெய் ஊற்றி, பஞ்சு திரி போட்டு வைக்கவும்.

அதன்பின், கிழித்து வைத்த 6 வெற்றிலை காம்புகளையும் நல்லெண்ணெய்க்குள் போட்டு விட்டு, தீபத்தை ஏற்றவும்.

தீபத்தில் எண்ணெய் சூடாகி வெற்றிலை காம்பில் இருந்து லேசான நறுமணம் வீசும். தீபத்திற்கு அடியில் இருக்கும் காம்பு இல்லாத வெற்றிலையில் இருந்தும் நல்ல நறுமணம் வீசும்.

இந்த நறுமணத்தை நன்றாக சுவாசம் செய்து தீபத்தை நோக்கியவாறு, உங்கள் குல தெய்வத்தையும், இஷ்ட தெய்வத்தையும் மனதில் நினைத்துக்கொண்டு, ஐந்து நிமிடங்கள் உங்கள் மனதில் நினைத்திருக்கும் கோரிக்கையை வைத்து பிரார்த்தனை செய்தால் போதும்.

இப்படி செய்வதனால் எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும், அது விரைவாக தீர்ந்து நன்மைகயை உண்டாக்கும்.



ஜெனிவாவில் ஈழத்தமிழருக்கு ஆதரவு கோரிய போராட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# ஜோதிடத்தை நம்பி மகனை எரித்து கொன்ற தந்தை

(திருவாரூர்)

தந்தை தனது மகனை மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து கொன்ற கொடூர சம்பவம் இந்தியாவில் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

இந்தியாவின் திருவாரூர் மாவட்டத்தில் தந்தை ஒருவர் ஜோதிடத்தை நம்பி தனது 5 வயது நிரம்பிய மகனை மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொன்றுள்ளார். மகனால் எதிர் காலத்தில் தந்தைக்கு ஆபத்து ஏற்படலாம் என ஜோதிடர் கூறிய வார்த்தையை நம்பி ஏமாந்து குறித்த நபர் இந்த கொடூர செயலை செய்துள்ளார். குறித்த சம்பவம் திருவாரூர் மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி-4)

# அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்தார் சசிகலா




(சென்னை)

தமிழகத்தில் தேர்தல் அரசியல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் அரசியலில் இருந்து விலகுவதாக சசிகலா அறிவித்துள்ளார்.

சசிகலாவின் கையெழுத்து மற்றும் திகதியுடன் செய்திக் குறிப்பு என்ற பெயரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு அறிக்கையொன்று வெளியாகியுள்ளது. இது தமிழக அரசியலில் பேசுபொருளாக மாறியுள்ளது. (நி-4)

# காதலின் சின்னத்திற்கு அச்சுறுத்தல்



(டில்லி)

வெடி குண்டு அச்சுறுத்தலின் பின்னர் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முகலாய காலத்தின் நினைவுச்சின்னமான தாஜ்மஹால் நேற்று வியாழக்கிழமை தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்தியாவின், ஆக்ராவில் அமைந்துள்ள தாஜ்மஹால் வளாகத்திற்குள் வெடிகுண்டு வைத்துள்ளதாக உத்தர பிரதேச பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற அடையாளம் தெரியாத நபரின் தகவலின் பின்னர் தாஜ்மஹால் மூடப்பட்டதுடன், அங்கிருந்த ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளையும் வெளியேறுமாறு பணிக்கப்பட்டது.

அதன்பின்னர் பொலிஸார் பாதுகாப்பு அமைப்பு குழுக்களுடன் சென்று தாஜ்மஹால் வளாகம் முழுவதும் தேடல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

எனினும் அவ்வாறான எந்த வெடிபொருள் சாதனங்களும் இதன்போது மீட்கப்படாத நிலையில் தாஜ்மஹாலின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டு, நினைவுச்சின்னம் மீண்டும் காலை 11.15 மணியளவில் சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து விடப்பட்டது.

பொலிஸாருக்கு வந்த இந்தப்போலியான வெடிகுண்டு அச்சுறுத்தல் தொடர்பான அழைப்பு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி-4)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம்

## வணிகத்தில் முதலாம் மற்றும் இரண்டாம் தேர்வு(வெளிவாரி)-2017 இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் யாழ். பல்கலைக் கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தினை இன்று 05.03.2021 ஆம் திகதியிலிருந்து 19.03.2021 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி- மாலை 4.15 மணி வரை) திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அல்லது WWW. codI.jfn.ac.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம் , பரீட்சை நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

(சி-1600)

பதிவாளர்

# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

## விலைமனு கேள்விக்கானஅழைப்பு

வாகன சுத்திகரிப்பு, காகிதாதிகள் அலுவலக உபகரணங்கள், வைத்தியசாலைக்கான துணி வகைகள்(Linen Items ) -2021/2022

பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான , தகைமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் வழங்கல் சேவைகளுக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி | முன்னாய்வுக் கலந்துரையாடல் | கேள்விதிறக்கும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|
| 01. | NP/RDHS/VS/ 2021/2022 | வாகனசுத்திகரிப்பு | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் | 20,000.00 | 12.03.2021 | 22.03.2021 மு.ப 10.00 |
| 02. | NP/RDHS/VT/ 2021/2022 | வாகன ரயர்கள் | | - | | |
| 03. | NP/RDHS/VB/ 2021/2022 | வாகன பற்றரிகள் | | - | | |
| 04. | Np/RDHS/Stationary/2021/2022 | காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள் | | - | | |
| 05. | Np/RDHS/Linen Items /2021/2022 | வைத்தியசாலைக்கான துணிவகைகள் (Linen Items ) | | - | | |

1. விலைகேள்விதாரர் தெரிவு செய்யும் விநியோகத்திற்கான ஒரு நபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.
2. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் இல 572/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கம்- 021222 2278/6253 Ext 20 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
3. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் ‘Application for Bid documents’ என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்க முடியாத வைப்புத் தொகையாக ரூபா 1,000.00 காசாகச் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 08.03.2021 தொடக்கம் 19.03.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
4. விலைக்கேள்விகள் 22.03.2021 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர் (நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். “விண்ணப்பிக்கும் விநியோகத்தின் பெயர் 2021/2022” போன்ற விபரங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும். குறித்த விண்ணப்பங்கள் 22.03.2021 ஆம் திகதி 10.00 மணிக்கு பெறுகைகள் 01 தொடக்கம் 05 உம் 10.00 மணிக்கு விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
5. விலைமனுதாரர்கள் அல்லது எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.
6. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு கேள்வி ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.
7. கிடைக்கப் பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலை கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

(சி-1601)

தலைவர்
பிராந்திய பெறுகைகள் குழு
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம்...

பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர்.

இதனால் திரையரங்கு மூன்று நாட்களுக்கு மூடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3,18,33)

## குழந்தை பிரசவி...

பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(ம-3,18,33)

## சுவர் இடிந்து...

றொருவர் படுகாயமடைந்துள்ள சம்பவம் மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் மன்னார், மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவிலுள்ள சின்ன சன்னார் கிராமத்தில் நேற்று வியாழக்கிழமை மதியம் 1.30 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான 27 வயதுடைய இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

மேலும் அவரது சகோதரன் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-3,285)

## கிளிநொச்சியில்...

இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இதில் கிணற்றுக்குள் குதித்த தாயார் கிணற்றின் படிக்கற்களை பிடித்ததினால் உயிர் தப்பிக் கொண்டார். ஒரு பிள்ளையின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஏனைய குழந்தைகளை தேடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது கிணற்றுக்குள் இருந்து நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்ட நீதவான் ரி. சரவணராஜா முன்னிலையில் கடற்படையின் உதவியுடன் இரண்டு குழந்தைகளின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இச்சம்பவத்தில் ஒன்றரை வயதுடைய கிருபாகரன் டேனேஸ், ஐந்து வயதுடைய கிருபாகரன் அக்சயா, எட்டு வயதுடைய கிருபாகரன் கிருத்திகா என்ற குழந்தைகளே பலியாகியுள்ளனர். (ம-3,316,350)

## மருத்துவ பீட...

வர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்த குறித்த மாணவன் யாழ்ப்பாணம் வந்திருந்த நிலையில் அவர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம-3)

## முதியவர் ஒருவர்...

சேர்ந்த 76 வயதான முதியவர் ஒருவரே இவ்வாறு நஞ்சருந்தி விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. (ம-3,30)

## மல்லாகத்தில்...

இனந்தெரியாத குழு வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் வாள்வெட்டுக்கு இலக்கான ஆசிரியர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேர் கொண்ட வாள்வெட்டு குழுவே தாக்குதலை நடத்திவிட்டு தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## வடக்கில் 13...

பட்டிருப்பதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் 11 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் இருவருக்குமாக வடமாகாணத்தில் 13 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## மேலும் 5...

துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 489 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## சடலங்களை...

மாதா நகர் பகுதியில் மக்கள் மற்றும் பங்குத் தந்தையர்கள் இணைந்து போராட்டம் மேற்கொண்ட போதிலும் தொடர்ச்சியாக இரணைதீவு பகுதியில் உடல்களை புதைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினம் வியாழக்கிழமை இரணைதீவு பகுதியில் இரண்டு இடங்களில் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இரணைதீவு பிரதான இறங்குதுறை மற்றும் உடல்களை அடக்கம் செய்வதற்கு குழிகள் தோண்டப்பட்ட இடம் ஆகியவற்றில் மக்கள் நேற்றைய தினம் போராட்டத்தை மேற்கொண்டனர்.

அதேநேரத்தில் இரணைதீவு பகுதிக்கு செல்லும் மக்களிடம் கடற்படையினர் அச்சுறுத்தும் விதமாக செயற்படுவதாகவும் தீவு பகுதியில் வசிக்கும் மக்கள் தீவுக்கு செல்வதற்குமுன் அடையாள அட்டையை கடற்படையினரிடம் ஒப்படைத்து செல்ல வேண்டும் என பணிக்கப்படுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர். (ம-3,100,285,315)

## இலங்கையில்...

நெருக்கடிக்குள் தள்ளும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தனர்.

இப்போதும் தேசிய ரீதியில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க அரசு முயற்சிகளை எடுத்தாலும்கூட சர்வதேசமும் தமிழர் தரப்பும் திருப்தியடையப் போவதில்லை.

எனவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரும் பிரேரணையை நாம் கருத்தில் கொள்ளாது இருப்பதே அரசாக நாம் எடுக்கும் நகர்வாகும்.

தமிழர் தரப்பு எதனைக் கூறிக் கொண்டு இருந்தாலும் அதனை நாம் கருத்தில் கொள்ளப் போவதில்லை.

அதுமட்டுமல்ல, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரும் பிரேரணையின் மூலம் இலங்கைக்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது. பிரேரணையுடன் நாம் இணைந்திருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை" என்றார். (ம-3)

## யாழ்....

முன்னணியினரால் நேற்றைய தினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாண காணிகளின் ஆவணங்களை காணி சீர் திருத்த ஆணைக்குழுவின் அனுராதபுர அலுவலகத்துக்கு மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதனை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தியும் இந்த மறியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை ஆரம்பமாகிய குறித்த போராட்டம் பிற்பகல் வரை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டிருந்ததோடு யாழ். அரச அதிபர் மற்றும் வட மாகாண ஆளுநர் செயலகத்துக்கும் மகஜர் கையளிக்கப்பட்டது. (ம-3,33)

## போதைப் பொருளுடன் மன்னாரில் 4 பேர் கைது

(மன்னார்)

தலைமன்னார் - ஊருமலை பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

தலைமன்னார் - ஊருமலை கடற்பகுதியில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது ஐஸ் போதைப்பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-3)

## அருந்திக்க...

பனை மற்றும் கைத்தொழில்துறை இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் இராஜாங்க அமைச்சர் அருந்திக்க, கைதடி மற்றும் கரவெட்டியிலுள்ள பனங்கட்டித் தொழிற்சாலையில் இடம்பெறும் கூட்டங்களிலும் பங்குபற்றவுள்ளதோடு பளையில் அமைந்துள்ள வட மாகாண தென்னைப் பயிர்ச்செய்கை சபைக்கும் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதேவேளை நாளை சனிக்கிழமை யாழில் இடம்பெறும் கூட்டங்களிலும் பங்குபற்றவுள்ளார். (ம-3)






























# ST.ANTONY'S COMPUTER

189, K.K.S Road, Jaffna Town. 021 222 4865 / 0750698608




(C-1604)

4 Chennal DVR
5MP Camara*4
21500/- Olny

Pioneer SECU
PINNACLE OF RELIABILITY FOR A SAFER WORLD


# பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த விலையில் பாதணிகள், கொப்பிகள்

## அமைச்சர் பந்துல குணவர்தன

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகள் மற்றும் அப்பியாசப் புத்தகங்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதங்களில், பாடசாலை மாணவர்களுக்கு மிகச்சிறந்த பாதணிகளை சலுகை விலையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

300 ரூபாய் விலை குறைப்பு செய்து, பாதணிகளை சந்தைக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதேநேரம், அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் மூலம், அப்பியாசப் புத்தகங்களின் சந்தை விலையை குறைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன கூறியுள்ளார்.

(ம-03)

# பயங்கரவாத தடைச் சட்டம் மறு பரிசீலனை செய்யப்படும்

## ஐ.நாவுக்கு இலங்கை பதில்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) ஏற்பாடுகள் மறு பரிசீலனை செய்யப்படவுள்ளதாக, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு அரசாங்கத்தால் பதிலளிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் ஆட்சேபனை தெரிவித்து வெளியிடப்பட்ட பதில் அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் முழுமையான பதிலை, இணையத்தில் வெளியிடக் கோரி இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் எழுதியிருந்தது.

இதன்படி, ஐ.நா. வெளியிட்டுள்ள பதிலில், "பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைபு குறித்த ஏற்பாடுகள் தொடரப்படவில்லை என இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டது.

பாராளுமன்றத்தின் சர்வதேச உறவுகள் தொடர்பான துறை மேற்பார்வைக் குழு, மதத் தலைவர்கள், தொழிற் சங்கங்கள், மாணவர் அமைப்புகள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் பொது அமைப்புகள் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களின் அடிப்படையில் இந்த நேரத்தில் அத்தகைய சட்டம் தேவையற்றது.

எவ்வாறாயினும், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தின் முன்னேற்றத்திற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக அரசாங்கம் கூறியது.

இந்தச் செயற்பாட்டின் மூலம், பிற அதிகார வரம்புகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசத்தின் சிறந்த நடைமுறைகளுக்கு உதவுவதாக அரசாங்கம் கூறியது.

மேலும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான முன்மொழிவு உட்பட, சர்வதேச மட்டத்தில் பொறுப்புக்கூறல் விடயங்களை முன்னெடுப்பதற்கான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் முன்மொழிவை இலங்கை அரசாங்கம் நிராகரித்தது.

(ம-03)


## பணியாளர்கள் தேவை


சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு கீழ் வரும் பணி நிலைகளுக்குரிய பணியாளர்கள் தேவை. தகுதியுடையோர் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரில் வருகை தரவும்.

- கொத்து, றைஸ் தயாரிப்பவர்
- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்)
- றொட்டி வேலை செய்பவர்.

(6029)

தொடர்புகளுக்கு
077 649 1027, 077 940 0963


## மரண அறிவித்தல்



பிறப்பு : 21.02.1939
இறப்பு : 01.03.2021

### திரு. கந்தையா அம்பலவாணர்

(அரசன்)

(சுப்பிரமணியம் வீதி, இடைப்பிட்டி, காரைநகர்.)

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் டொரொண்டோ, கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. கந்தையா அம்பலவாணர் (அரசன்) கடந்த 01.03.2021 (திங்கட்கிழமை) சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், வேலுப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி, சுப்பிரமணியம், அம்பலவாணர், தியாகராஜா, நடராசா, தங்கமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மனோகரதாஸ் (கனடா), மனோரதி (கனடா), மனோகௌரி (நியூஸிலாந்து), மனோதர்ஷினி (கனடா), மனோபாலன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பவதி, பார்த்திபன், ஜெகன், கிரிஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஜன், தேவசேனா கஜந்தன், ஜயனி, சாருகன், சந்தோஷ், அஜீஷ், வெண்பா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்வுகள் :**

**கிரியை**
Sunday, March 7, 2021 From 9.00 a.m to 10.30 a.m
Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON, L3R 5G1

**தகனம்**
Sunday March 07, 2021 at 11.00 a.m
Highland Hills Crematorium, 12492 Woodbine Avenue, Gormley, ON, L0H 1G0

**கோவிட் - 19 நெருக்கடி நிலை காரணமாக இறுதி நிகழ்வுகள் குடும்ப உறுப்பினர்களுடனேயே நடைபெறும்.**

நேரடி ஒளிபரப்பு (Live Stream)
https://video.ibm.com/channel/chapelridgefh2

(6007)

மனோகரதாஸ் (மகன், கனடா) : +1 416-994-7229
மனோரதி (மகள், கனடா) : +1 416-824-4384
மனோகௌரி (மகள், நியூஸிலாந்து) : +64 21 208 2319
மனோதர்ஷினி (மகள், கனடா) : +1 647-470-8407
மனோபாலன் / கண்ணன் (மகன், அமெரிக்கா) : +1 (413) 474-1810
புவி (பெறாமகன், கிளிநொச்சி) : +94 77 320 5496
தனா (பெறாமகன், கிளிநொச்சி) : +94 77 071 2402

தகவல் : குடும்பத்தினர்


## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)



(C-1617)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777068777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய், நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

(2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட காணி 14 அடி பாதையுடன்)

பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரம்.

(தரகர் தேவையில்லை.)

(6028)

தொடர்பு
077 596 3845, 076 640 0974

## நேரடி / Online (Zoom) வகுப்புகள்

நீண்ட அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் Gr10, O/L வகுப்புகளுக்கான ICT, வணிகக் கல்வியும் கணக்கீடும் (Tamil / English Medium) பிரத்தியேகமாகவோ அல்லது குழுவாகவோ கற்பிக்கப்படுகின்றது.

(6029)

077 628 6461, 077 645 2622

## சாரதிகள் தேவை

கனரக வாகன சாரதிகள் உடன் தேவை.

தொடர்பு
076 704 9351

(6025)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவீஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1546)

0768226240 DHL

## அண்ணா EXPRESS

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

(C-1548)

லண்டன் 1000/=
070 3305500
077 888 9388

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை

பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை

மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.